விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினாறு — Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2041 மார்கழி 14 புதன்கிழமை (29.12.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 010

ரா ம் கோ
RAMCO
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போர்ட்லான்ட்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# இலங்கை-இந்தியாவுக்கு இடையே பலப்படுத்தப்படும் பாதுகாப்பு!

## நேற்றைய சந்திப்பில் இணக்கம்

(கொழும்பு)

இலங்கை மற்றும் இந்தியாவுக்கு இடையில் தற்போது நடைமுறையில் உள்ள பாதுகாப்பு தொடர்பான உறவுகளை மேலும் பலப்படுத்துவதற்கு இரு நாடுகளும் இணங்கியுள்ளதாக இந்தியா தெரிவித்துள்ளது. இலங்கை சென்றுள்ள இந்தியப் பாதுகாப்புச் செயலர் பிரதீப் குமாருக்கும் இலங்கை பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பின்போது இந்த இணக்கம் காணப்பட்டுள்ளது. (16ஆம் பக்கம் பார்க்க)

## பருவக்காற்று காணப்படுவதால் சில தினங்களுக்கு மழை நீடிக்கும்!

### வளி மண்டலவியல் திணைக்களம் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்குக் கிழக்கு பருவக்காற்று தொடர்ந்து தீவிரமாக காணப்படுவதால் இன்னும் சில நாட்களுக்கு மழை பெய்யும் என வளிமண்டலவியல் திணைக்களம் நேற்றுத் தெரிவித்தது.

இதேவேளை வெள்ளத்தின் காரணமாக இரண்டு இலட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்தது.

4 ஆயிரத்து 410 பேர் வெள்ளத்தினால் இடம்பெயர்ந்து 16 முகாம்களில் வசிப்பதாகவும் அனர்த்த (16ஆம் பக்கம் பார்க்க)

## காஸ் இறக்குமதி வரி நீக்கம்

(கொழும்பு)

சமையல் காஸ் விலையை உறுதியாக பேணுவதற்காக காஸ் இறக்குமதிக்கு விதிக்கப்பட்டிருந்த இறக்குமதி வரியை நீக்குமாறு வர்த்தக அமைச்சுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. இதன் மூலம் காஸின் விலை குறைவடையக்கூடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## இலங்கை விடயத்தில் பின்வாங்கும் ஐக்கிய நாடுகள் சபையின் செயற்பாடு

### இன்னர் சிற்றி பிரஸ் குற்றச்சாட்டு

(நியூயோர்க்)

இலங்கை தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் பிற்போக்கான செயற்பாடு தொடர்பாக இன்னர் சிற்றி பிரஸ் குற்றஞ்சாட்டியுள்ளது.

இலங்கையின் மனித உரிமைகள் மற்றும் போர்க் குற்றங்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையினால் நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழு இலங்கைக்கான விஜயத்தை மேற்கொள்ளும் என கடந்த 17 ஆம் திகதி பொது செயலாளர் பான் கீ மூன் அறிவித்தார்.

எனினும் கடந்த 23-ம் திகதி இந்தக்குழு இலங்கைக்கு செல்வது குறித்த திட்டங்கள் எவற்றையும் கொண்டிருக்கவில்லை என சபையின் பேச்சாளர் பர்ஹான் ஹக் இன்னர் சிற்றி பிரஸிடம் தெரிவித்திருந்தார். (16ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கு விஜயம் செய்த பாக். ஆளுநர் நெருக்கடியில்

(கொழும்பு)

இலங்கைக்கு இரகசியமாக விஜயம் செய்த பாகிஸ்தான் பஞ்சாப் மாநில ஆளுநர் சல்மான் தாஸீரை பதவிநீக்கம் செய்யுமாறு லாகூர் மேல் நீதிமன்றத்தில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஆளுநர் வெளிநாடு செல்வது குறித்து அரசாங்கத்துக்கு அறிவிக்கவில்லை எனவும் அவர் நாட்டில் இல்லாதவேளை பதில் ஆளுநர் ஒருவரை நியமிக்கத் தவறியுள்ளதாகவும் நௌசாப் கான் எனும் சட்டத்தரணி தாக்கல் செய்த மனுவில் தெரிவித்துள்ளார்.

இதனால் மூன்று நாட்கள் ஆளுநர் பதவி வெற்றிடமாக இருந்ததாகவும் அவர் இம் மனுவில் தெரிவித்துள்ளார்.

டிசம்பர் மாதம் 5ஆம் திகதி சல்மான் தாஸீர் பாகிஸ்தானிலிருந்து மர்மமாக காணாமல் போனார். (16ஆம் பக்கம் பார்க்க)



இலங்கை-இந்திய பாதுகாப்பு செயலர்களுக்கிடையிலான சந்திப்பின் போது...

## தொடர்ந்தும் மன நோயாளிகளால் தமிழர்கள் கொல்லப்படுகின்றனர்

### சிறிதரன் எம்.பி. காட்டம்

(யாழ்ப்பாணம்)

காலத்திற்கு காலம் மனநோயாளிகளாலும் கஞ்சாவிற்காக துப்பாக்கி கொடுப்பவர்களாலும் தமிழர்கள் கொல்லப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால் இதற்கெல்லாம் எந்த விதமான நடவடிக்கைகளும் இன்றுவரைக்கும் மேற்கொள்ளப்படவில்லை. இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. நாளைக்கும் தொடரும் என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் தெரிவித்தார். உரும்பிராயில் சுட்டுக் கொல்லப்பட்ட வலிகாமம் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் மார்க்கண்டு சிவலிங்கத்தின் பூதவுடல் ஆயிரக்கணக்கான மக்கள் மற்றும் அதிகாரிகள் சூழ தகனம் செய்யப்பட்டது.

இவரது இறுதிக் கிரியைகள் நேற்று அவரது இல்லத்தில் நடைபெற்றது. இதன்போது ஆயிரக்கணக்கான (16ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளே...

வன்னியில் கைவிடப்பட்டு கண்டுபிடிக்கப்பட்ட வாகனங்களின் இலக்கங்கள்..

சிவல்புரி சிங்காரம் எழுதும் 2011 ஆம் ஆண்டிற்கான சிறப்பு பலன்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடதுசாரி முன்னணித் தலைவர் மனித உரிமை ஆணைக்குழுவில் முறையீடு

(கொழும்பு)

இம்மாத முற்பகுதியில் தானும் தனது ஆதரவாளர்களும் தாக்குதலுக்குள்ளான சம்பவம் தொடர்பில் நேற்று செவ்வாய்க்கிழமை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இடதுசாரி முன்னணித் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன முறைப்பாடு செய்துள்ளார்.

இந்த மாத முற்பகுதியில் பிரித்தானியாவிலிருந்து, இலங்கை திரும்பியிருந்த இடதுசாரி முன்னணியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்னவும் அவரது கட்சி உறுப்பினர்களும் விமான நிலையத்தில் வைத்து தாக்கப்பட்டதாக அவர் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

இலங்கை பிரஜை என்ற வகையில் நாட்டிற்குள் நுழைவதற்கான உரிமை இத்தாக்குதலின் மூலம் மீறப்பட்டுள்ளதாக கூறிய அவர் இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பில் தான் தொடர்ந்து கவனம் செலுத்தவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் முறைப்பாடு செய்துள்ள போதிலும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. விமான நிலையப் பொலிசாரான பிரதிப் பொலிஸ்மா அதிபரிடம் நான் முறையிட்டேன் அவர்கள் எனக்கும் எனது கட்சி உறுப்பினர்களுக்கும் பாதுகாப்பு வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்திருந்த போதிலும் இதுவரை எதுவும் செய்யவில்லை.

விமான நிலையத்திலிருந்து வெளியேறிய பின்னர் அங்கிருந்த எனது ஆதரவாளர்கள் தாக்கப்பட்டுள்ளனர். வாகனமொன்று எரியூட்டப்பட்டது. குறித்த இடத்தில் நடந்த சம்பவங்களை பதிவு செய்த ஊடகவியலாளர்களும் சட்டத்தரணிகளும் தாக்கப்பட்டனர். தாக்குதல் சம்பவம் இடம்பெற்று மறுநாள் நான் பொலிஸில் முறைப்பாடு செய்தேன் எனவும் அவர் கூறினார். (சு)


## நீர்வள பிரதியமைச்சரின் வீடும் வெள்ளத்தில் மூழ்கியது

நீர்ப்பாசன நீர்வளங்கள் முகாமைத்துவ பிரதியமைச்சர் டபிள்யு.பி.ஏக்கநாயக்கவும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளார். அநுராதபுரத்திலுள்ள அவரது வீடு நேற்று வெள்ளத்தில் மூழ்கியது.

தானும் தனது குடும்பத்தினரும் பாதிப்பின்றி வீட்டிலிருந்து வெளியேற முடிந்ததாக பிரதியமைச்சர் ஏக்கநாயக்க தெரிவித்தார்.

வடக்கு கிழக்கில் பெய்துவரும் கடும் மழையினால் பெருமளவானோர் இடம்பெயர்ந்துள்ளதுடன் சொத்துக்களும் சேதமாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# கோழி முட்டை 12 ரூபாய்; அறிவித்தது அரசாங்கம்



அனைத்து சதொச விற்பனை நிலையங்கள் கோப்சிட்டி மற்றும் மினி கோப் சிட்டி விற்பனை நிலை யங்களில் 12 ரூபாயிற்கும் மொத்த சந்தையில் 11 ரூபாய்க்கும் கோழி முட்டை விற்பனை செய்யப்படும் என உள்நாட்டு வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

நேற்று மாலை சதொச தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர்,

போட்டி நிலைமை கருதி தனியார் துறையினரும் கோழி முட்டையின் விலைகளை குறைப்பர். அகில இலங்கை கோழி பண்ணையாளர் சங்கத்தின் மாபியா செயற்பாடுகளுக்கு இனிமேல் அனுமதியளிக்கப்படமாட்டாது.

கோழிமுட்டைகள் இறக்குமதி செய்யப்படுவது விலைகளை குறைக்க மாத்திரமே. முட்டைகளின் விலை குறைவடைந்து நிலையான மட்டத்தை அடையும்வரை இறக்குமதி செய்யப்படும்.

ஒவ்வொரு திங்கள் மற்றும் புதன் கிழமைகளில் 2 மில்லியன் கோழி முட்டைகள் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு கொள்வனவு செய்யப்படவுள்ளன.

இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகள் துறை முகத்தை வந்தடைந்ததாக அறிந்தவுடன் அகில இலங்கை கோழிப் பண்ணையாளர் சங்கத்தினர் தாம் 10 ரூபாய்க்கு முட்டை விற்பனை செய்யப் போவதாக கூறியதாக அறிந்தேன்.

இதேவேளை இறக்குமதி செய்யப்பட்ட 500 மெற்றிக்தொன் கோழி இறைச்சியை குறைந்த விலையில் சதொச விற்பனை செய்யும். ஹலால் சான்றிதழுடனேயே கோழி இறைச்சிகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது எனவும் அமைச்சர் தெரிவித்தார். (சு)

# புனர்வாழ்வளிக்கப்பட்ட புலிகளின் விபரங்கள் திரட்டப்படுகின்றன

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் இணைந்து செயற்பட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு புனர்வாழ்வளிக்கப்பட்ட நிலையில் விடுவிக்கப்பட்ட போராளிகள் குறித்து படைத்தரப்பின் புலனாய்வுப் பிரிவினர் தகவல்களைத் திரட்டிவருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட பயிற்சிகளை உரியமுறையில் பயன்படுத்திக்கொள்கிறார்களா என்பது தொடர்பில் இராணுவம் மற்றும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் இணைந்து சோதனைகளை நடத்தி வருவதாக சிறிலங்கா படைத்தரப்பின் குரல்தரவல்ல அதிகாரி மேஜர் ஜெனரல் உபய மெதவல ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

இவ்வாறு விடுவிக்கப்பட் போராளிகள் மீண்டும் குற்றச் செயல்களில் ஈடுபடாதவாறு நடவடிக்கை மேற்கொள்ளவும் அவர்களுக்கு வழங்கப்பட்ட பயிற்சிகள் உரிய முறையில் பயன் படுத்தப்படுகின்றனவா என்பது தொடர்பிலும் அறிவதற்காகவே படைத்தரப்பினர், அவர்கள் குறித்த தகவல்களை திரட்டிவருவதாகவும் மேஜர் ஜெனரல் உபய மெதவல மேலும் குறிப்பிட்டர்.

இந்நிலையில் யாழ் மாவட்டத்தில் விடுவிக்கப்பட்டுள்ள போராளிகள் தொடர்பான விபரங்களை படைத் தரப்பின் புலனாய்வுப் பிரிவினர் பொலிஸாரின் ஒத்துழைப்புடன் கிராம அலுவலர்கள், பிரதேச செயலாளர்கள், உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்கள் மூலம் பெற்றுவருவதால் இவ்வாறு விடுவிக்கப்பட்ட போராளிகள் மத்தியில் பெரும் பதற்ற நிலை தோன்றியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (எ)

# இந்தியப் படையினரின் சமாதிக்கு பாதுகாப்புச் செயலர் அஞ்சலி

இலங்கைக்கு மூன்று நாள் நாள் விஜயமொன்றை மேற்கொண்டு கொழும்பு வந்துள்ள இந்திய பாதுகாப்பு செயலாளர் பிரதீப்குமார் நேற்று காலை கொழும்பு பத்தரமுல்லையில் அமைக்கப்பட்டுள்ள இந்திய படையினருக்கான நினைவுத் தூபிக்குச் சென்று அஞ்சலி செலுத்தினார்.

இந்திய அமைதி காக்கும் படையினர் என்ற பெயரில் இலங்கைக்கு விஜயம் செய்த இந்தியப் படையினரில் விடுதலைப் புலிகளுடன் இடம்பெற்ற போரில் கொல்லப்பட்ட ஆயிரத்து 200 படையினரின் நினைவாக இந்த சமாதி அமைக்கப்பட்டுள்ளது. இந்திய பாதுகாப்பு செயலாளருடன் அந்நாட்டு முப்படை அதிகாரிகள் மற்றும் இந்தியத் தூதுவர் ஆகியோரும் சமாதிக்கு சென்றிருந்தார்கள். (சு)

# மாவட்ட அபிவிருத்தி மாநாடு முல்லைத்தீவில் நேற்று நடந்தது

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பயிற்சி நிலையமொன்றை அமைப்பதற்கான தீர்மானம் நேற்று நடைபெற்ற மாவட்ட அபிவிருத்தி உயர்மட்ட மாநாட்டில் எடுக்கப்பட்டதாக முல்லைத்தீவு அரசாங்க அதிபர் என் வேதநாயகம் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது,

முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி உயர்மட்ட மாநாடு நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தலைமையில் மாவட்ட செயலகத்தில் நேற்று செவ்வாய்கிழமை சுமார் ஒரு மணித்தியாலமாக நடைபெற்றது

மாவட்டத்தில் காணப்படும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. விளையாட்டுத்துறையை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளும் இதன்போது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அந்தவகையில் பிரதேச மாவட்டங்களில் கரப்பந்தாட்டம் மற்றும் வலைப்பந்தாட்டத்திற்கான திடல்கள் உட்பட விளையாட்டு மைதானங்களை அமைப்பதற்கு இதன் போது தீர்மானிக்கப்படவுள்ளதாக அவர் கூறினார்.

நேற்று நடைபெற்ற முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி உயர்மட்ட மாநாட்டில் விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே, வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் நலன்புரி சேவைகள் அமைச்சர் டிலான் பெரேரா, நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ முல்லைத்தீவு மாவட்டத்தின் பாதுகாப்பு படைகளின் தளபதி உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இதேவேளை வேல்ட் கொன்சேர்ன் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட ஐஸ் தொழிற்சாலையையும் நாமல் ராஜபக்ஷ நேற்று திறந்து வைத்ததாகவும் முல்லைத்தீவு அரசாங்க அதிபர் என். வேதநாயகம் தெரிவித்தார். (எ)

# கொழும்பில் 7 நட்சத்திர ஹோட்டல் ஹொங்கொங் நிறுவனம் திட்டம்!

(கொழும்பு)

ஹொங்கொங்கை தளமாகக் கொண்ட உல்லாசத் துறை நிறுவனமான ஷாங்க்ரி-லா கொழும்பில் 7 நட்சத்திர ஹோட்டலொன்றை அமைப்பதற்கு காணியை பெற்றுக்கொள்வதற்கான ஒப்பந்தமொன்றில் கையெழுத்திட்டுள்ளதாக சுற்றுலா அதிகாரசபையின் தலைவர் நாலக கொடஹேவா தெரிவித்தார்.


காலிமுகத்திடலுக்கு அருகில் அரசாங்கத்துக்குச் சொந்தமான 10 ஏக்கர் காணியை பெறுவதற்கான ஒப்பந்தத்தில் நேற்று ஷாங்க்ரி-லா கையெழுத்திட்டதாக நாலக பொடஹேவா மேலும் கூறியுள்ளார்.

தற்போது அக்காணியில் அமைந்துள்ள இராணுவத் தலைமையகம் கொழும்பின் புறநகர் பகுதியொன்றுக்கு மாற்றப்படவுள்ளது.

சுமார் 500 அறைகளைக் கொண்டதாக அமைக்கப் படவுள்ள இந்த ஹோட்டல் திட்டத்தில் ஷாங்க்ரி-லா நிறுவனம் 500 மில்லியன் அமெரிக்க டொலர்களை முதலீடு செய்யவுள்ளதாகவும் கொடஹோ கூறினார்.

30 ஆண்டு கால யுத்தம் கடந்த வருடம் முடிவுக்கு வந்ததையடுத்து சுற்றுலாப்பயணிகளின் வருகை அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)


AWARENESS PROGRAMME



Want to be a world recognised Engineer?

Let Sri Lanka Telecom help you to make your dream a reality...

The nation's undisputed most trusted name in the communications arena, *Sri Lanka Telecom now offers you an opportunity* to obtain a prestigious and internationally recognised Bachelors Degree(Engineering) in Telecommunication /Mobile Communications/ Electronics at a cost effective price.

**We Guarantee...**

- The most professionally qualified and internationally trained ***lecturers with hands-on experience and unmatched field expertise***
- The ideal student friendly learning environment supplemented with the latest educational resources ***in state-of-the-art class rooms specially designed to train Telecom staff***
- ***The best in-plant training facilities in Sri Lanka*** that offers the most sophisticated and ultra modern high tech telecommunication equipment
- An internationally recognised degree on par with other highly acclaimed universities worldwide at an attractive ***low investment ( Investment for Tution fee including 3rd year studies in UK is less than Rs. 2 Million)***

***Entrance Requirement :***

Two Passes at the Advance Level Examination in the math's stream

Interview will be conducted after the seminar

Date / Venue :To be Informed soon

For more details contact 0715364938 / 0112951571/ btechnd@slt.com.lk

**Commencing soon** | **Registration now on**

edexcel BTEC HND

www.training.slt.lk







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## ஆபிரகாம் லிங்கன்

அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் ஒருநாள் தன்னு ஽டைய கோச்சு வண்டியில் தலைநகரான வோஷிங்டனுக்கு போய்க் கொண்டிருந்தார்.கோச் வண்டி ஒரு வீதியால் போய்க் கொண்டிருந்தது.

அந்த வீதிக்குப் பக்கத்தில் சதுப்பு நிலம் இருந்தது. அதில் யாராவது மாட்டிக் கொண்டால் அவ்வளவுதான். ஆளைக் கொஞ்சம் கொஞ்சமாக உள்ளே இழுத்துவிடும். தப்பித்து கரையேறுவது மிகவும் கஷ்டம்.

ஆபிரகாம் லிங்கன் ஏதோ ஒரு முக்கியமான அரசாங்க வேலையாக போய்விட்டு திரும்பி வந்து கொண்டிருந்தார். அதனால் அந்தச் சமயத்தில் அவர் விலையுயர்ந்த ஆடைகளை அணிந்திருந்தார். கோச்வண்டி ஒரு வளைவால் திரும்பும் போது அவருடைய கண்ணில் ஒரு காட்சி பட்டுவிட்டது.

அது என்னவெனில், வீதிக்குப் பக்கத்திலிருந்த சதுப்பு நிலத்தில் ஒரு பன்றிக்குட்டி சிக்கிக்கொண்டு தவித்துக் கொண்டிருந்தது. பரிதாபமாக கத்திக் கொண்டிருந்தது.

லிங்கன் அதைக் கண்ணுற்றார்.

அவருக்கு ஏதோமாதிரியாகி விட்டது.

உடனே வண்டியை நிறுத்தச் சொல்லி கீழே இறங்கினார். தன்னுடைய விலையுயர்ந்த ஆடைகளைப் பற்றி இலட்சியம் பண்ணவில்லை. தனக்கே ஆபத்துவரலாம் என்பதைப் பற்றியும் கவலைப்படவில்லை. தான் ஒரு ஜனாதிபதி என்பதைப் பற்றியும் அவர் நினைக்கவில்லை.

நேராக அந்தச் சதுப்பு நிலம் பக்கமாக போனார். அந்த சேற்றில் இறங்கி பன்றிக்குட்டியைக் காப்பாற்றிக் கரைக்குச் கொண்டு வந்து சேர்த்தார். அதன்பின் நிம்மதியாக கோச் வண்டியில் ஏறி வெள்ளை மாளிகைக்கு வந்து சேர்ந்தார்.

உடுப்பு முழுவதும் சேறும் சகதியுமாக இருந்தது. பார்ப்பவர்களுக்கெல்லாம் ஆச்சரியமாகிவிட்டது. அவர்களுக்கு ஒன்றும் புரிய வில்லை.

இவர் நேராக உடுப்பு மாற்றிக்கொள்வதற்குப் போனார். கோச்வண்டி ஓட்டிக்கொண்டு வந்தவனிடம் ஓடிப்போய் என்ன நடந்தது என்று எல்லோரும் கேட்டார்கள்.

அவன் வரும் வழியில் நடந்த விவரத்தைச் சொன்னான். ஆபிரகாம்லிங்கனுடைய இந்த இரக்க குணத்தை எல்லோரும் பாராட்டினார்கள், புகழ்ந்தார்கள்.

ஆனால், இதற்கு லிங்கன் என்ன பதில் சொன்னார் தெரியுமா?

"தயவுசெய்து இந்தப் புகழ்ச்சியான பேச்சையெல்லாம் ஒதுக்குங்கள். அதெல்லாம் வேண்டாம்.

அந்தச் சின்னப்பிராணி சகதியில் மாட்டிக்கொண்டு துடித்துக் கொண்டிருந்தது. அதைப் பார்த்தேன். உடனே என் இதயத்தில் முள் தைத்தது போன்று ஒரு உணர்வு ஏற்பட்டது. உடனே அந்த முள்ளைப்பிடுங்கி எறிந்தேன்.

அவ்வளவுதான்.

உண்மையில் அந்தப் பிராணிக்கு நான் உதவினேன் என்பதைவிட எனக்கு ஏற்பட்ட இன்னலைப் போக்கிக் கொண்டேன் என்பதுதான் உண்மை. அதுதான் பொருத்தம். அப்படி இருக்கும் போது இதில் புகழ்வதற்கு என்ன இருக்கிறது? என்றாராம் ஆபிரகாம் லிங்கன்.

இந்தக் காலத்தில் நம்மில் பலபேர் இப்படி உண்டு. நீச்சல் தெரியாத ஒரு ஆள் தண்ணியில் இறங்கி விட்டான். தண்ணி ஆழம் என்பது பிறகு தான் தெரிந்தது. தத்தளிக்க ஆரம்பித் தான்.வாள்வாளென்று கத்தினான். கரையில் நின்று கொண்டிருந்த ஒருத்தர் இதைப் பார்த்தார். உடனே அவருக்கு இதயத்தில் முள் தைத்தது போன்ற ஓர் உணர்வு. உடனே தண்ணியில் பாய்ந்தார். அவரைக் காப்பாற்றிக் கரைக்குக் கொண்டு வந்து சேர்த்தார். இதைப் பார்த்துக் கொண்டிருந்த இன்னொருத்தர் காப்பாற்றின அந்த ஆளைப் பாராட்டினார், புகழ்ந்தார்.

"என்னைப் புகழாதீங்க சேர்" என்றார் அவர்.

"ஏன்?" என்று கேட்டார் இவர்.

"நான் அந்த ஆளை ஏன் காப்பாற்றினேன் தெரியுமா? அவன் நேற்றுத்தான் என்னிடம் 300 ரூபா கடன் வாங்கினான். இவன் தண்ணியில் போய்விட்டான் என்றால் நான் குடுத்த கடனும் தண்ணியில் போய்விடுமே. அதனால் தான் காப்பாற்றினேன்" என்றான் அந்த ஆள்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# புலமைப்பரிசிலில் சித்தியடைந்த மாணவர்களுக்கு பணப்பரிசில்

(பருத்தித்துறை)

2010 ஆம் ஆண்டில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றிய சித்தியடைந்த மாணவர்களுக்கு இலங்கை வங்கி விஷேட திட்டத்தின் கீழ் பணப்பரிசில் வழங்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

மாவட்டத்தில் முதல் 10 இடங்களைப் பெற்றவர்களுக்கும் 170 புள்ளிகளுக்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றவர்களுக்கும் 10 ஆயிரம் ரூபா பணப்பரி சில் வழங்கப் படவுள்ளது.

இலங்கை வங்கியில் சிறுவர் சேமிப்புக் கணக்கு உள்ள மாணவர்களுக்கே இந்தப் பணப்பரிசில் வழங்கும் திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

தகுதியுடையவர்கள் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும்.

அத்துடன் மேலதிக விபரங்களை மாணவர்கள் இலங்கை வங்கியுடன் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளலாம் என தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-3-10)

# மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

உயரழுத்த மின்மார்க்கங்களில் பராமரிப்பு வேலைகள் செய்யும் பொருட்டு இன்று புதன்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய் ஆகிய இடங்களுக்கான மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் எனவும் வேலைகள் முன்னதாக முடிவுற்றால் குறிப்பிடப்பட்ட நேரத்திற்கு முன்னதாகவும் மின்விநியோகம் வழங்கப்படலாம் என இலங்கை மின்சார சபையின் யாழ்.பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ)

# கிளிநொச்சி சந்தைப் பகுதியில் வெள்ளநீர் தேங்கியுள்ளது

## வர்த்தகர்களும் நுகர்வோரும் பெரும் சிரமம்

கிளிநொச்சி நகர சந்தைப் பகுதியில் தேங்கி நிற்கும் வெள்ள நீரினால் தொற்றுநோய் ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

கிளிநொச்சி நகரத்தில் உள்ள சந்தைப்பகுதி குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது.இதனால் தற்போது தொடர்ந்து பெய்து வரும் கடும் மழையால் அதற்குள் வெள்ள நீர் தேங்கி நிற்கின்றது.

இதனால் டெங்கு நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.அத்தோடு விற்பனையாளர்களும் நுகர்வோரும் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.இச்சந்தைப் பகுதியில் உள்ள மலசல கூடங்கள் நிறைந்து வழிகின்றன. இதனால் துர்நாற்றம் வீசுகின்றது.

பாவிக்கக் கூடிய நிலையில் இருக்கும் மலசல கூடங்களைப் பாவிப்பதற்குக் கூட போதிய தண்ணீர் வசதி இல்லை எனவும் இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ஸ்ரீ-4)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120-150 | 180 | 100 |
| உருளைக்கிழங்கு | 65 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 180 | 250 | 170 |
| தக்காளி | 70 | 120 | 90 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 40 |
| கோவா | 60 | 80 | 80 |
| கரட் | 40 | 120 | 90 |
| பூசணி | 25 | 40 | 50 |
| புடோல் | 60 | 100 | 90 |
| வாழைக்காய் | 30-40 | 50 | 40 |
| சின்ன வெங்காயம் | 120-200 | 240 | 210 |
| பெரிய வெங்காயம் | 200 | 200 | 150 |
| பாகற்காய் | 100 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 60 | 100 | 60 |
| கரணைக்கிழங்கு | 40 | 60 | 60 |
| பயிற்றங்காய் | 190 | 200 | 210 |
| லீக்ஸ் | 90 | 140 | 100 |
| பீற்றூட் | 80 | -- | 100 |
| கறிமிளகாய் | 200 | 250 | 190 |
| முருங்கைக்காய் | 170 | -- | -- |
| போஞ்சி | 80 | 140 | 140 |
| கத்தரி தம்புள்ள | 120-150 | 160 | 120 |
| கீரை - 1 பிடி | 20 | 50 | 40 |
| தேசிக்காய் | 80 | 100 | 90 |
| தேங்காய் (ஒன்று) | 45 | 50 | 45 |

# இராசி பலன்

29.12.2010
(மார்கழி 14, புதன்கிழமை)
நவமி முன்னிரவு 9.11 மணிவரை
அத்தம் காலை 7.04 மணிவரை
சித்திரை பின்னிரவு 5.40 மணி வரை
இராகுகாலம் 12.28-1.58 மணிவரை
சுபநேரம் 4.58-6.28 மணிவரை
பிற்பகல் 2.29 மணி முதல்
கெற்போட்ட ஆரம்பம்.

**மேடம்** நண்பர்கள் உங்களைப் பாராட்டுவார்கள், சூழ்நிலைக்கேற்ப குணத்தை மாற்றிக்கொள்வீர்கள், போட்டியாக இருந்தவர்கள் மனம் மாறுவர், தேகாரோக்கியம் சீராகும்.

**இடபம்** விடியும் பொழுதே நல்ல செய்திகள் வந்து சேரும் நாள், அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்வீர்கள், கௌரவமான் நிலை.

**மிதுனம்** வாகன யோகத்தால் வளம் காணும் நாள், தொழில் முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகள் வெற்றிதரும், சுப செலவுகள் ஏற்படலாம்.

**கடகம்** ஆதரவு தருபவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும், கூட்டு முயற்சி வெற்றிதரும், குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும், பொருளாதாரம் மேம்படும்.

**சிங்கம்** விருந்தினர் வருகை விருப்பத்தை நிறைவேற்றும், கொடுத்த வாக்கைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், தொலைபேசி வழித்தகவல்கள் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும்.

**கன்னி** அமைதி நிலவ இஷ்ட தெய்வத்தை வழிபடவேண்டிய நாள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, உங்களுக்கு உதவிய சிலரை சந்திக்கும் வாய்ப்புண்டு.

**துலாம்** இன்பங்கள் கிடைக்க கலியுகவரதனை வழிபடவேண்டிய நாள்,குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள், அலைச்சல் சற்று அதிகரிக்கும்.

**விருச்சிகம்** எடுத்த கருமங்களில் எளிதில் வெற்றி கிடைக்கும் நாள், தொழிலில் வருமானம் அதிகரிக்கும், பொதுவாழ்வில் புகழ் கூடும், உறவினர் வருகையுண்டு.

**தனுசு** பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், புதிய பொருட் சேர்க்கையுண்டு, பெருமையடைய வேண்டிய நாள், உற்சாகத்துடன் பணி புரிவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**மகரம்** மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், தந்தை வழி உறவினர்கள் மூலம் சுப செய்திகள் வந்து சேரலாம், திடீர் பயண வாய்ப்புக்கள் ஏற்படலாம்.

**கும்பம்** குறைவாகப் பேசினாலும் குறை கூறிப் பேசாமல் இருப்பது நல்லது, மருத்துவச் செலவுகள் ஏற்படலாம், கவலைகள் தீர கண்ணனை வழிபடவேண்டிய நாள்

**மீனம்** திருமணப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரலாம், ஆரோக்கியமான நாள், நட்பு வட்டம் விரிவடையும், செல்வாக்கு அதிகரிக்கும்

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொது சுகாதாரப் பரிசோதகர்களுக்கான மோட்டார் சைக்கிள் வழங்கும் நிகழ்வும் யாழ்.மாநகர சபைக்குக் கீழ் இயங்கும் வைத்தியசாலை சுகாதார தொழிலாளர்களுக்கு நியமனம் வழங்கும் நிகழ்வும் நேற்று முன்தினம் யாழ்.பிராந்திய சுகாதார திணைக்களத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி உரையாற்றுவதையும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஒருவருக்கு மோட்டார் சைக்கிள் வழங்கப்படுவதையும் அருகில் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் நிற்பதையும் சுகாதாரத் தொழிலாளிக்கு நியமனக் கடிதத்தினை யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலன்ரின் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள் என்.குமார்)

# தமிழ்க்கட்சிகள் ஒன்றிணைந்து தமக்கான கோரிக்கையை முன்வைக்க வேண்டும்

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



(கொழும்புத்துறை)

அரசியல் வேறுபாடுகள் கருத்து முரண்பாடுகளுக்கு அப்பால் தமிழ்க்கட்சிகள் ஒன்றிணைந்து தமக்கான கோரிக்கையை முன்வைக்கும் பட்சத்தில் சுமுகமான தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியும் என பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுகைத் தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்.மாநகர சபையின் ஒன்றுகூடல் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்கள் ஒற்றுமையுடன் சகல தமிழ்த்தரப்பினர்களையும் ஏற்றுக் கொண்டு எவ்வளவு விரைவாக ஒருமித்த கருத்தோடு வருகின்றீர்களோ உங்கள் பிரச்சினைகளை தீர்க்கலாம் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்திருக்கின்றார். எதிர்க்கட்சி உறுப்பினர்களில் ஒரு சிலராவது இவ் ஒன்றுகூடல் நிகழ்வில் கலந்து கொண்டதையிட்டு மகிழ்வடைகிறேன். அந்த வகையில் அரசியல் பேதங்களுக்கு அப்பால் யாழ். மாவட்ட மக்களுக்கு சேவையாற்றி அவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் மு.றெமீடியஸ் முதல் உரையாற்றிய கருத்தை நான் வரவேற்கின்றேன் என்றார்.

இந்நிகழ்வில் தலைமை தாங்கிய மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா உரையாற்றுகையில்,

ஏ-9 வீதி திறக்கப்பட்டதன் பின்னர் 30 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் யாழ்ப்பாணம் வந்து போயுள்ளதை புள்ளி விபரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

நாம் பதவியேற்று ஒரு வருட நிறைவு நாளாகிய இன்று இவ்விழாவை ஏற்பாடு செய்தமையையிட்டு மகிழ்வடைகின்றோம். இன்று நாம் ஒரு தோற்றுப் போன சமூகமோ தோற்கடிக்கப்பட்ட சமூகமோ அல்ல. உலகில் நிமிர்ந்து நிற்கும் தமிழினம். யாழ். மாநகர சபையானது சகல துறைகளிலும் மக்களுக்கு சேவையாற்றி வருகிறது.

வீதிகள், வடிகால்கள் உட்பட ஏனைய சேவைகளுக்கு 18 மில்லியன் ரூபா யாழ். மாநகர சபையினால் செலவிடப்பட்டுள்ளது.

2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மின்விளக்குகள் யாழ். மாவட்டத்தில் பொருத்தி 80 வீதமான பகுதிகளுக்கு ஒளியேற்றினோம் என்றார். (ஸ்ரீ-3-51)

## விசேட கல்வி திட்டமிடல் செயலமர்வு

(அல்வாய்)

விசேட கல்வித் திட்டமிடல் செயலமர்வு எதிர்வரும் ஜனவரி மாதம் 4 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு யா/கனகரட்ணம் மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

வடமாகாணத்தில் 12 கல்வி வலயங்களைச் சேர்ந்த விசே. கல்விக்கு பொறுப்பான கல்வி ஆலோசகர்களும் கல்வி அபிவிருத்திக்கு பொறுப்பான பிரதிக்கல்விப் பணிப்பாளர்களும் பிரதம இணைப்பாளர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.

மேலும் அன்றைய தினம் 2011 இற்கான விசேட கல்விக்குரிய நிதி ஒதுக்கீடுகள் அறிவிக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

(ஸ்ரீ-3-19)




## ஐந்து தசாப்தங்களுக்கு மேலாக புனரமைக்கப்படாதுள்ள வீதி

(பருத்தித்துறை)

வடமராட்சியில் அல்வாய் வடக்கு கந்தப்புலவு வீதி ஐந்து தசாப்தங்களுக்கு மேலாக புனரமைக்கப்படாமல் முற்றாக அழிந்து பாதசாரிகள் நடந்து செல்ல முடியாத அளவுக்கு படுமோசமான நிலையில் காணப்படுகிறது.

பருத்தித்துறை பிரதேச சபைக்கு சொந்தமான இந்த வீதியை புனரமைப்பதற்கு அப்பகுதி மக்கள் பாராளுமன்ற உறுப்பினர்களிடமும் அரச அதிபரிடமும் பருத்தித்துறை பிரதேச சபை செயலாளரிடமும் கடித மூலமாக தெரியப்படுத்தியும் எவரும் அவ்விடயத்தில் அக்கறை கொள்ளாத நிலை காணப்படுவதால் அப்பகுதி மக்கள் விசனம் அடைகின்றனர்.

எனவே அவ்வீதியைப் புனரமைக்க உரிய தரப்பினர் விரைவாக செயற்பட வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ஸ்ரீ-3-10)

## அகில இலங்கை கலை இலக்கிய சங்கம் நடத்தும் கட்டுரைப்போட்டி

(மருதங்கேணி)

அகில இலங்கை கலை இலக்கிய சங்கத்தினால் வருடம்தோறும் நடத்தப்படும் கட்டுரைப்போட்டி இம்முறை சர்வதேச மட்டத்தில் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. இக் கட்டுரைப் போட்டி நாடகக்கலைஞர் அமரர் கந்தை. வடிவேலு ஞாபகார்த்தமாக நடைபெறவுள்ளது

இதில் வயது வித்தியாசமின்றி அனைவரும் பங்கேற்கலாம். ''ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் சிற்றிதழ்களில் பங்கு'' எனும் தலைப்பில் கட்டுரைகள் எழுதப்படல் வேண்டும்.

இப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப்பெறும் அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 5 ஆயிரம், 3 ஆயிரம், 2 ஆயிரம் பணப்பரிசுகளுடன் சான்றிதழ்களும் வழங்கப்படும். மேலும் 10 ஆறுதல் பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டு கௌரவிக்கப்படவுள்ளனர்.

இப்போட்டியின் ஆக்கங்களை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 25ஆம்திகதிக்கு முன்னர் பண்டிதர் பொன்.சுகந்தன் தலைவர் அகில இலங்கை கலை இலக்கியச் சங்கம், (இலங்கை வங்கி முன்பாக) நெல்லியடி, கரவெட்டி எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு சங்கத்தின் செயலாளர் சு.கணபதிப்பிள்ளை கேட்டுள்ளார்.

(ஸ்ரீ-3-35)

## தனிமையிலிருந்த பெண்ணை தாக்கி சங்கிலியை அபகரிக்க முயன்ற சம்பவம் முறியடிப்பு

(கரவெட்டி)

வீட்டில் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்த வயோதிபப் பெண்ணொருவரை கூரிய ஆயுதத்தினால் தாக்கி அவருடைய கழுத்தில் இருந்த தங்க நகையை அபகரிக்க முயன்ற சம்பவம் ஒன்று கடந்த 26 ஆம் திகதி இரவு 7 மணிக்கு பருத்தித்துறையில் இடம்பெற்றுள்ளது.

சம்பவதினம் வீட்டுக்காரர் யாரும் இல்லாத சமயம் வயோதிபப் பெண் தனிமையில் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்த வேளை திடீரென்று வீட்டிற்குள் புகுந்த இனந்தெரியாத நபர் வயோதிபப் பெண்ணை கூரிய ஆயுதத்தால் தாக்கி விட்டு அவருடைய தங்க நகைகளை அபகரிக்க முற்பட்டவேளை பெண்மணி கூக்குரலிடவே மர்ம நபர் தப்பிச் சென்றுள்ளார்.

இச்சம்பவத்தில் அவ்விடத்தைச் சேர்ந்த கதிர்காமத்தம்பி பொன்மணி (வயது 74) என்ற வயோதிபப் பெண்ணே தலையில் பலத்த காயங்களுடன் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஸ்ரீ-3-24)

## பதவியுயர்வு

(கரவெட்டி)

பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற பதிவாளர் சின்னத்தம்பி இராஜேஸ்வரன் நீதிச் சேவை ஆணைக்குழுவால் பதிவாளர் தரம் III இல் இருந்து தரம் II இற்கு தரமுயர்த்தப்பட்டுள்ளார்.

இவர் எதிர்வரும் ஜனவரி மாதம் 3 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்ற பதிவாளராக கடமையேற்கவுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ஸ்ரீ-3-24)

## வருட இறுதி மீளாய்வுக் கூட்டம்

(அல்வாய்)

வடமராட்சி கல்வி வலயத்தின் வருட இறுதி மீளாய்வுக் கூட்டம் நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு புலோலி மெ.மி.த.க. பாடசாலை மண்டபத்தில் வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் வ.செல்வராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு பிரதிக்கல்விப் பணிப்பாளர்கள், உதவிக்கல்விப் பணிப்பாளர்கள், சேவைக்கால ஆலோசகர்கள், வடமராட்சி வலய பாடசாலை அதிபர்கள் ஆகியோரை 2011 ஆம் ஆண்டுக்குரிய வேலைத்திட்டம் தயாரிப்பதற்காகவும் தரஉள்ளீடு தொடர்பான அறிக்கைகளை சமர்ப்பிப்பதற்காகவும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-3-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியார் பல்கலைக்கழகங்களை அமைக்க தொடர்ந்தும் எதிர்ப்பு

எத்தகைய சூழ்நிலையிலும் இலங்கையில் தனியார் பல்கலைக்கழகங்களை ஆரம்பிக்க இடமளிக்கப் போவதில்லை என அகில இலங்கை பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் கடந்த 26 ஆம் திகதி இடம்பெற்ற ஊடக சந்திப்பு ஒன்றின் போது ஒன்றியத்தின் இணைப்பாளர் உதுல் பிரேமரத்ன இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் தனியார் பல்கலைக்கழகங்களை உருவாக்கும் முயற்சிக்கு எதிராக உடனடியான எதிர்ப்பார்ப்பாட்டங்களை முன்னெடுக்கவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் உயர்கல்வி அமைச்சின் செயலாளர் சுனில் ஜயந்த நவரட்ன தெரிவிக்கையில்,

தனியார் பல்கலைக்கழகங்களை அமைப்பது தொடர்பாக சட்டமூலம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் இது தொடர்பாக சட்டதிணைக்களம் விரைவான நடவடிக்கைகளை தற்போது மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தார்.

இந்தச் சட்டமூலம் நாடாளுமன்றில் நிறைவேற்றப்படும் பட்சத்தில் இலங்கையில் தனியார் பல்கலைக்கழகங்கள் அமைக்கப்படும் எனவும் உயர் கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# உள்ளூராட்சி மன்ற தேர்தல் தொடர்பில் தெளிவற்ற நிலையில் அரசாங்கம்

(கொழும்பு)

தொகுதிவாரி மற்றும் விகிதாசார முறை ஆகியன இணைந்த கலப்பு முறையின் கீழ் உள்ளூராட்சி மன்ற தேர்தலை நடத்துவதற்கு ஏதுவான முறையிலான சட்ட மூலம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என அரசாங்க பிரதம கொறடா தினேஸ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் அடுத்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலை தற்போதுள்ள முறையிலா அல்லது முன்மொழியப்பட்டுள்ள முறையிலா நடத்துவது என்பது தொடர்பில் இதுவரை அரசாங்கம் உறுதியில்லாத நிலையிலுள்ளது.

இதேவேளை அடுத்த வருடம் மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் எந்த முறையிலாவது உள்ளூராட்சி மன்ற தேர்தல் கட்டாயம் நடத்தப்பட வேண்டும் என ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

நாங்கள் ஒரு வருடத்திற்கு மாத்திரமே அதை ஒத்தி வைத்தோம். மீண்டும் ஒத்தி வைப்பதற்கு எந்தக் காரணமும் இல்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆனாலும் எந்த முறையில் இத்தேர்தல் இடம் பெறும் என்று உறுதியாகக் கூற முடியாது எனக் குறிப்பிடும் சுசில் பிரேமஜயந்த குறு கிய காலத்திற்குள் எல்லை நிர்ணய குழுக் களை அமைத்து புதிய சட்டத்தின் கீழ் தேர்தல் நடத்துவதில் நடைமுறை சிக்கல் உள்ளது என அவர் கூறினார். (ஸ்ரீ-4)

# லொத்தர் சீட்டிழுப்பில் வெற்றிபெற்ற தோட்டத் தொழிலாளியிடம் நிதிமோசடி

(கொழும்பு)

லொத்தர் சீட்டிழுப்பில் வெற்றியீட்டிய தோட்டத் தொழிலாளி ஒருவரின் பணம் மோசடி செய்யப்பட்டுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. மொரவக்க பிரதேசத்தைச் சேர்ந்த தோட்டத்தொழிலாளி ஒருவரின் பணம் இவ்வாறு மோசடி செய்யப்பட்டுள்ளது.

லொத்தர் சீட்டிழுப்பு ஒன்றில் சின்னையா செல்லத்துரை என்ற தோட்டத் தொழிலாளி 21 மில்லியன் ரூபா வெற்றியீட்டியதாகத் தெரிவிக்கப்படுகிறது. வங்கி முகாமையாளர் உள்ளிட்ட சில நபர்கள் குறித்த தொழிலாளியின் வங்கிக் கணக்கிலிருந்து மோசடியான முறையில் பணத்தை மீளப் பெற்றுக்கொண்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கட்டம் கட்டமாக வங்கியில் வைப்புச் செய்யப்பட்டிருந்த பணம் மோசடியான முறையில் மீளப் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.எழுத, வாசிக்கத் தெரியாத குறித்த தோட்டத் தொழிலாளர் வெற்றிபெற்ற லொத்தர் சீட்டை மற்றுமொரு நண்பருக்கு காண்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த நண்பரும் மேலும் சில நபர்களும் இணைந்து தொழிலாளியின் பணத்தை மோசடி செய்துள்ளதாக மாத்தறை பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# நூல் வெளியீட்டு விழா

நெடுந்தீவு -முகிலன் எழுதிய *கடவுளின் சயனத்தைக் கலைக்கும் மணி யோசை* எனும் 7ஆவது நூல் வெளியீட்டுவிழா எதிர்வரும் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு மன்னார் நகர சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலக திட்டப்பணிப்பாளர் அ.பத்திநாதன், சிறப்பு விருந்தினர்களாக மன்னார் இந்து ஆலயங்களின் ஒன்றி யத்தலைவர் கலாநிதி மு.கதிர்காமநாதன், மன்னார் வர்த்தக கைத்தொழில் விவசாய சம்மேளனத் தலைவர் எஸ்.பி.றெக்ஸ்குலாஸ் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந் நூலின் மதிப்பீட்டு உரையினை மன்னார் தமிழ்ச் சங்கத்தலைவர் தமிழ்நேசன் அடிகளார் நிகழ்த்தவுள்ளார்.

நூலின் முதல் சிறப்புப்பிரதியை தேசகீர்த்தி தேசப்பந்து கலாநிதி அ.அரசக்கோன் பெற்றுக்கொள்வார். (ஸ்ரீ-4)


# PATRICIAN INSTITUTES

## பற்றீசியன் தொழிற்பயிற்சி நிறுவனங்கள்

## ஆரம்பம் : 03.01.2011

***மாணவர்களுக்கு மகிழ்ச்சியான ஓர் நற்செய்தி!***

**எமது நிறுவனம் மூன்றாம் நிலைக்கல்வி, தொலைக்கல்வி ஆணைக் குழுவில் பதியப்பட்டு பயிற்சிகளுக்கு அரச அங்கிகாரம் பெற்ற சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன என்பதை அறியத்தருகிறோம்.**

TVEC REG -NO-P 25 /0021

## 01. COMPUTER COURSES

| | |
|---|---|
| A. ADVANCED IN COMPUTER PROGRAMMING | DURATION 8 MONTHS |
| B. DIPLOMA IN MICROSOFT OFFICE | DURATION 4 MONTHS |
| C. DIPLOMA IN DESK TOP PUBLISHING | DURATION 4 MONTHS |
| D. DIPLOMA IN VIDEO EDITING | DURATION 4 MONTHS |
| E. DIPLOMA IN TYPE SETTING | DURATION 3 MONTHS |
| F. DIPLOMA IN COMPUTERIZED ACCOUNTING | DURATION 4 MONTHS |
| G. DIPLOMA IN SOFTWARE ENGINEERING | DURATION 6 MONTHS |
| H. DIPLOMA IN MICRO MEDIA | DURATION 4 MONTHS |
| I. DIPLOMA IN WEB MULTIMEDIA | DURATION 4 MONTHS |
| J. PROFESSIONAL DIPLOMA IN GRAPHIC DESIGN | DURATION 6 MONTHS |
| K. COMPUTER HARDWARE TECHNOLOGY | DURATION 4 MONTHS |
| L. INTERNET & E-MAIL | DURATION 1 MONTH |
| M. GENERAL IN FOR MATION TECHNOLOGY (GIT) | DURATION 4 MONTHS |
| N. INFORMATION & COMMUNICATION TECHNOLOGY (ICT) | DURATION 4 MONTHS |
| O. CHILDREN'S KIDS | DURATION 4 MONTHS |

| | |
|---|---|
| ii. SHORT HAND AND TYPING (ENGLISH)<br>சுருக்கெழுத்தும், தட்டெழுத்தும் (ஆங்கிலம்)<br>கணனி மூலமும் தட்டெழுத்து பயிற்சி அளிக்கப்படும். | DURATION 6 MONTHS |
| iii. SHORT HAND AND TYPING (TAMIL)<br>சுருக்கெழுத்தும், தட்டெழுத்தும் (தமிழ்)<br>கணனி மூலமும் தட்டெழுத்து பயிற்சி அளிக்கப்படும். | DURATION 6 MONTHS |
| iv. GENERAL MOTOR MECHANISM<br>(Petrol & Diesel வாகனங்கள்) மோட்டார் வாகனம் திருத்துதல் | DURATION 6 MONTHS |
| v. GENERAL ELECTRICIAN<br>(Wiring & Re Winding) ஜெனரல் எலக்ரிஷன்<br>(மின்சார இணைப்பு, மோட்டார் றிவைண்டிங்) | DURATION 6 MONTHS |
| vi. RADIO & T.V.REPAIRING<br>வானொலி, தொலைக்காட்சிப் பெட்டி திருத்துதல் | DURATION 6 MONTHS |
| vii. LATHE MACHINE OPERATIO<br>கடைச்சல் இயந்திரப் பயிற்சி<br>(on the job training வழங்கல்) | DURATION 6 MONTHS |
| viii. ARC WELDING<br>மின் ஒட்டுநர் பயிற்சி (on the job training வழங்கல்) | DURATION 6 MONTHS |
| ix. CARPENTRY (With use of machinery)<br>மரவேலை (on the job training வழங்கல்) | DURATION 6 MONTHS |
| x.REFRIGERATION AND AIRCONDITIONING<br>குளிர்சாதனப் பெட்டி திருத்துதல் | DURATION 6 MONTHS |

எமது நிறுவனத்தினால் ஒடருக்கு மிகவும் திறமையாகவும் ,சிறந்த கட்டமைப்பாகவும் பின்வரும் மர உருக்கு சார் பொருட்கள் செய்து வழங்கப்படும்
1.பாடசாலை விளையாட்டு உபகரணங்கள் Swing,See-Saw, Silder, Climber, Marigo Round.
2.பாடசாலை கதிரை/மேசைகள்
3.கட்டடங்களுக்காக Trues,Gate,Grils போன்ற உபகரணங்கள் எம்மால் செய்து வழங்கப்படும்.

## *வாகனத் தகுதிச் சான்றிதழ்-2011*

**2011ஆம் ஆண்டுக்கான வாகன தகுதிச் சான்றிதழ் மார்கழி மாதம் 27ஆம் திகதியிலிருந்து (திங்கட்கிழமை) வழங்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன என்பதை வாகன உரிமையாளர்களுக்கு தெரிவித்துக்கொள்கின்றோம்.**

குறிப்பு:
1. பயிற்சிக் கட்டணங்களைத் தவணை முறையில் செலுத்தலாம்.
2. வன்செயலால் பாதிக்கப்பட்ட அல்லது வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மாணவர்கள் பயிற்சிக் கட்டணத்தில் சலுகைகள் பெறலாம்.
3. பயிற்சிநெறிகள் சம்பந்தமான சகல விபரங்களையும் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு
REGISTRAR,
PATRICIAN INSTITUTE,
61(59), St. PATRICK'S ROAD.
JAFFNA.
T.P.NO: 021 222 6148
FAX : 021 222 6148
E.Mail: Spitee@Sltnet.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்:மாநகர சபையின் வருடாந்த ஒன்றுகூடலும் ஒளிவிழா நிகழ்வும் நேற்று யாழ்.மாநகர சபை வளாகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி,யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோ.பற்குணராஜா ஆகியோர் உரையாற்றுவதையும் யாழ்.மாவட்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் 2ஆம் இடத்தைப் பெற்ற யாழ்.மாநகர சபை விளையாட்டுக்கழகத்திற்கு கேடயத்தை பாரம்பரியக் கைத்தொழில்கள் மற்றும் சிறு கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா வழங்குவதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள் அ.சாள்ஸ்)

## அறிவுறுத்தல் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் எதிர்வரும் 2011 ஆம் கல்வியாண்டில் ஆறாந்தரத்திற்கு அனுமதி பெற்ற மாணவர்களது பெற்றோருக்கான அறிவுறுத்தல் கூட்டம் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

குறித்த அனைத்துப் பெற்றோரும் தவறாது கலந்துகொள்ளுமாறு பாடசாலை அதிபர் எஸ்.சேதுராஜா அறிவித்துள்ளார். (ஶ்ரீ-2)

## வவுனியா வடக்கு எல்லைப்புற வயல்காணிகளை வெலிஓயா பிரதேசத்துடன் இணைப்பதற்கு முயற்சி

### த.தே.கூட்டமைப்பிடம் மக்கள் முறைப்பாடு

(கொழும்பு)

வவுனியா வடக்கு நெடுங்கேணி பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட எல்லைப்புறக் கிராமங்களின் வயல்காணிகளை வெலிஓயா பிரதேச செயலகப் பிரிவுக்குள் சேர்ப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகத் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்.சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

மருதோடை, பட்டிக்குடியிருப்பு, கற்குளம், தனிக்கல்லு போன்ற எல்லைக் கிராமங்களைச் சேர்ந்த வயல்காணிகளே இவ்வாறு தமிழ் பிரதேசத்தில் இருந்து சிங்களப் பிரதேசமாகிய வெலிஓயா பிரதேச செயலகப் பிரிவுடன் இணைப்பதற்கு முயற்சிக்கப்படுவதாக அப்பகுதி மக்கள் அந்தப் பகுதிக்கு விஜயம் செய்தபோது தம்மிடம் தெரிவித்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

தனிக்கல்லு, இலுப்பைக்குளம் ஆகிய இரண்டு நீர்ப்பாசனக் குளங்களின் கீழ் சுமார் 500 ஏக்கர் வயல்காணிகள் இருப்பதாகவும் இந்தக் காணிகள் நானூறு வருடங்களுக்கு மேல் பழைமை வாய்ந்த இந்த வயல் காணிகளில் தாங்கள் விவசாயம் செய்து வந்ததாகவும் இப்போது அந்தக் காணிகளின் ஒரு பகுதியில் சிங்கள மக்கள் விவசாயம் செய்ய அனுமதிக்கப்பட்டிருப்பதுடன் தாங்கள் அங்கு செல்வதற்குப் பாதுகாப்பு இல்லை என்றும் அங்கு இன்னும் கண்ணிவெடிகள் அகற்றப்பட வேண்டியிருப்பதாகவும் இப்பகுதி மக்கள் தம்மிடம் தெரிவித்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் குறிப்பிட்டுள்ளார்.

வெலி ஓயா பிரதேச செயலகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்ட இப்பிரதேசத்தைச் சேர்ந்த ஊர்பிரதேச முக்கியஸ்தர்கள் சிலரிடம் இந்தப் பிரதேசத்தின் பகுதிகள் மகாவலி திட்டத்தின் கீழ் வெலிஓயா பகுதியுடன் இணைக்கப்படவுள்ளதாகவும் இம் மக்கள் அந்தப் பிரதேசத்தினுள் இணைந்து கொள்ள வேண்டும் என்றும் வெலிஓயா பிரதேச செயலர் மற்றும் மகாவலித்திட்ட அதிகாரி, அப் பகுதியைச் சேர்ந்த இராணுவ அதிகாரி ஆகியோர் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த மக்கள் தெரிவித்துள்ளனர்.

சிங்கள மக்களினால் விவசாயம் செய்யப்பட்ட காணிகளில் நெல் அறுவடை முடிவடைந்ததும் உரியவர்களிடம் ஒப்படைக்கப் போவதாகவும் அந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளதாகவும் நாடாளுமன்ற உறுப்பினரிடம் அப் பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக வவுனியா அரசாங்க அதிபருடன் தொடர்பு கொண்டுள்ளதுடன் ஜனாதிபதியின் கவனத்திற்கு இதனைக் கொண்டு வந்து தமிழ்ப்பிரதேசத்துக் காணிகளை வேறு பிரதேசங்களுடன் இணைக்காமல் இருப்பதற்கான நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

(ஶ்ரீ-2)

## ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன் ஆஜராக முடியாது

### ரணில் அறிவிப்பு

(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான ஜனாதிபதி ஆணைக் குழுவின் முன் சாட்சியமளிக்குமாறு அறிவிக்கப்பட்டதற்கு வாய்மொழிமூலம் பதிலளித்துள்ள நிலையில் எழுத்து மூலமான அழைப்பை விடுத்திருப்பது கேலிக்குரியது என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஆணைக்குழுவின் செயலாளர் வாய்மொழி மூலம் விடுத்த அழைப்புக்கு தான் பதிலளித்துள்ளதால் எழுத்து மூலம் அழைப்பு விடுப்பது அர்த்தமற்றது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சம்பிரதாயங்களின்படி ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் போன்ற பதவிகளை வகிப்போர் நாடாளுமன்றத்திற்கு மாத்திரமே பொறுப்புக்கூறவேண்டும். நாடாளுமன்றத்திற்கு வெளியில் இந்தப் பதவிகளை வகிப்பர்களிடம் கருத்துக்களை கேட்க விரும்பினால் ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவரால் அறிவிக்கப்பட வேண்டும். இதன் அழைப்பு விடுக்கப்படும் நபர் தேவையான விடயங்களைத் தெளிவுபடுத்திகொள்ள முடியும் .அதனை விடுத்து ஆணைக்குழுவின் செயலாளர் ஊடாக அழைப்பு விடுப்பது சம்பிரதாயம் அல்ல.

அன்றைய பிரதமர் என்ற வகையில் நிரந்தர போர்நிறுத்த உடன்படிக்கை குறித்து நாடாளுமன்றத்திற்கு மாத்திரமே நான் பொறுப்பு கூறுவேன். அதுதான் நாட்டின் அரசியல் அமைப்பில் காணப்படும் நிலைமை. அதற்கு மாறாக செயற்பட முடியாது.

அதேவேளை ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகத்தின் நிபுணர்குழ ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன் ஆஜராகுமா என்பதை தெளிவாக உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.



இந்த விடயங்களில் தெளிவான நிலைப்பாடுகள் இல்லாத நிலையில் ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன் ஆஜராக முடியாது. நல்லிணக்க ஆணைக்குழு எதிர்வாதிகளுக்கு சேறு பூசுவதற்காக பயன்படுத்தப்படுவதாகவும் ஒரு கருத்து நிலவுகிறது எனவும் ரணில் விக்கிரசிங்க குறிப்பிட்டுள்ளார்.

(ஶ்ரீ-2)



யாழ்.மாவட்டத்தில் வெற்றிடமாகவுள்ள சுகாதாரத் தொழிலாளி,சமையல்தொழிலாளி ஆகியோருக்கான நேர்முகப்பரீட்சை யாழ்.கல்வி வலயத்தில் நேற்று முன்தினம் முல்லைத்தீவு கல்விப் பணிப்பாளரும் நேர்முகப் பரீட்சைக்குழுத் தலைவருமான எஸ்.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெறுவதைப் படத்தில் காணலாம். (படங்கள்:என்.குமார்)

## இவ்வருடம் 2 இலட்சம் பேருக்கு வெளிநாட்டில் வேலைவாய்ப்பு

இவ்வருடம் இரண்டு இலட்சம் பேர் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பெற்று நாட்டைவிட்டு வெளியேறியுள்ளதாக வெளிநாட்டு அமைச்சு தெரிவித்துள்ளது.

மொத்தம் 2 இலட்சத்து 3 ஆயிரத்து 488 பேர் வெளிநாட்டு வேலைவாய்ப்பை பெற்றுள்ளதாகவும் இவர்களில் ஒரு இலட்சத்து ஆயிரத்து 140 பேர் ஆண்களும் 89 ஆயிரத்து 409 பேர் பெண்களுமாவர்.


90 ஆயிரம் பேர் சவுதி அரேபியாவில் வேலை பெற்றுள்ளதாகவும் தற்போது சவுதி அரேபியாவில் 56 ஆயிரத்து 100 இலங்கையர்கள் தொழில் புரிவதாகவும்அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கையிலிருந்து சென்றுள்ள ஏனையவர்கள் பஹறைரன், ஓமான், கட்டார், குவைத், இஸ்ரேல், சிங்கப்பூர், மலேசியா, ஜோர்தான், சைப்பிரஸ், மாலைதீவு, தென் கொரியா போன்ற நாடுகளில் பணிபுரிகின்றனர். (ஶ்ரீ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கள்ளிக்காட்டு இதிகாசம்

**6**



கவிப்பேரரசு வைரமுத்து



"ஏலே ராசா... மொக்கராசு... சொகமா இருக்கியா...? செல்லத்தாயி குரல் நடுங்கியதா தளும்பியதா இரண்டுக்கும் இடைப்பட்ட நிலையில் கலங்கியதா என்று கண்டறியக்கூடவில்லை. அவன் அவளைக் கண்களால் வாங்கிக் கொண்டானே தவிரக் காதுகளால் வாங்கவில்லை.

கொட்டத்தில் மாடுகட்டி, வெட்டுக் கட்டையில் சோளத்தட்டை நறுக்கி, காடிநிரப்பி, பஞ்சாரம் சேராமல் ஓட்டுக்கூரை இருட்டில் ஒதுங்கிப்போன சேவலை "வா வா வா வக்... வக்.. வக்..." என்று கோழி ஒலி செய்து அதை இறக்கி இனஞ்சேர்த்து, அண்டாத் தண்ணீர் மொண்டு முகங்கழுவி, காலுக்கு நீருற்றி ஒருகாலால் மறுகால் தேய்த்து உருமால் அவிழ்த்து முகந்துடைத்து, செல்லத்தாயி பக்கம் முகம் காட்டாமல் "கருவாட்டுச்சாறு இன்னைக்காச்சும் ஒறைக்கப் புளிக்க வச்சிருக்கியா கெழவி..." என்று முருகாயி பக்கம் திசை மாறினான் மெக்கராசு. மாடுகத்தினால் திரும்பிப்பார்க்கிறவன் தான் அழைத்தும் திரும்பிப்பாராதது கண்டு உள்ளுக்குள் உடைந்து நொறுங்கினாள் செல்லத்தாயி. நிறைமாதக்காரி அழக்கூடாது என்பார்கள். புகையேறிய லாந்தர் வெளிச்சத்தில் முழுசாய்த் தெரியவில்லை என்றாலும் அவள் குமுறிக் குலுங்குகிறாள் என்பதை-சுவரில் நீண்டுவிழுந்த நிழல் சொல்லியது.

மாடு கன்று சரிபார்த்து ஆட்டுக்கு அகத்திக்குழை கட்டிவிட்டு மகளை நோக்கிவந்த பேயத்தேவர் பாசத்தோடு பேசத் தொடங்கினார்.

"நீயாவா வந்த தாயி...?"

"வேற விதி...? சுடுகாட்டுக்குக்கூட நானாத்தான் நடந்து போயிப்படுத்துக் கணும்..."

"அப்பன் இருக்கேன்ல்ல... அழுகாதம்மா, ஆத்தாளப் பாத்தியா..."

"பார்த்தேன்."

"எப்படி இருக்கா?"

"இப்பவோ பெறகோன்னு கெடக்கா..."

ஒரு சிம்னிவிளக்கு அழுது கொண்டே எரிந்து கொண்டிருந்த உள்ளறையிலிருந்து வலியோடு கேட்டதொரு வயதான முனகல்.

பேயத்தேவர் பொழுதுவிழுந்துதான் குளிப்பார். உச்சியிலிருந்து பாதத்திற்குப் பயணம் போகாமல் பாதத்திலிருந்து உச்சிக்குப் பயணம் போவார். கொஞ்சம் 'வெந்நித்தண்ணி' வேண்டும் அவருக்கு. அதை யார் அளாவினாலும் பிடிக்காது. அவரே அறிவார் அவர் பதம். வெந்நீரில் தண்ணீர் கலக்காமல் தண்ணீரில் கொஞ்சங்கொஞ்சமாய் வெந்நீர் கலப்பார். வலக்கை வெந்நீர் ஊற்ற இடக்கை அண்டாவில் கிடக்கும் பதஞ்சொல்ல. தண்ணீரின் சில்லிப்பு மாறி-மார்கழி மாதத்து அக்குள் வெப்பம் மாதிரி-ஓர் இளஞ்சூடு வரும்போது ஒரு சொம்பு நீர் கொண்டு தொடையூற்றிச் சோதிப்பார். ஒரு பானை வெந்நீருக்கு ஒரு சொம்பு பதம். வெந்நீரில் சுகங்கண்டு தன்னைமறந்து மோனநிலை தலைப்பட்டு அலுப்பு அழுக்கு இரண்டையும் கழுவி வேட்டியைக் கட்டியும் கட்டாமலும், அதையே பிழிந்து துண்டாக்கித் துவட்டிக் கொள்வார்.

ஈரத்துண்டைப் பஞ்சாரத்தில் காயப்போட்டு விட்டு ஒற்றைக்கல் படியேறித் தாழ்வாரங் கடந்தார் முனகிக்கிடந்த மனைவி அழகம்மாளைத்தேடி.

அம்மிக்கல்லில் .ஆறிக்கொண்டிருந்தது ஆவி பறக்கும் கேப்பைக்களி, மொக்கராசைப் பொறுத்தவரையில் அது சர்க்கரைபோடாத அல்வா. கேப்பைக்களியை அகப்பையில் அள்ளி, களியின் தலை வழியே கருவாட்டுச் சாறூற்றி, கருவாடும் கத்தரிக்காயும் மிதக்க மிதக்கத் தாழ்வாரத்தில் வைத்தாள் முருகாயி. செல்லத்தாயிடம் ஒரு தட்டை நீட்டி - "தின்னாத்தா தின்னு..." என்றாள் பரிவோடு. இரண்டு முறை களி வாங்கி மூன்றுமுறை சாறுவாங்கிச் சாப்பிட்டு முடித்தானே தவிர, செல்லத்தாயி பக்கம் திரும்பி ஒருவார்த்தையும் பேசவில்லை மொக்கராசு. செல்லத்தாயி சொட்டுச் சொட்டாய் அழுதாள் சுவரில் சாய்ந்து.

கிராமத்து இரவு ஆழமானது. நிஜமான நிசப்தம் நிலவுவது, பகலெல்லாம் தேய்ந்தவர்கள், பன்னிரண்டு மணிநேரம் உழைத்தவர்கள், பகல் தூக்கத்தைத் தரித்திரமென்று சபிப்பவர்கள், இரவில் முற்றும் மறந்து தூங்குவார்கள் மூச்சுவிடும் பிணங்களாய், எங்கோ ஊளையிடும் நாயோசை-பாம்பு மாதிரியான பிராணிகள் பஞ்சாரத்துக்குள் புகுந்தால் அடிவயிற்றில் சிறகடித்துக் கிளம்பும் கோழியோசை-கிளைகளோடு காரசாரமாக விவாதிக்கும் காற்றின் பேரோசை-ஈயோ கொசுவோ கடித்தால் தலையாட்டும் மாட்டின் மணியோசை போன்ற அஃறிணை ஓசைகளும்-நோயாளிகளின் இருமல் முனகல் ஓசைகளும் தவிர மற்றபடி மௌனத்தின் கர்ப்பப்பைதான் ஒரு கிராமத்தின் இரவு.

நடைவாசல் திண்ணையில் வைக்கோல் பரப்பி-வைக்கோல் மேல் சாக்குவிரித்து-சாக்கின்மேல் துண்டுவிரித்து- கையிரண்டும் தலையணையாய்ப் படுத்திருந்தாலும் அன்று மட்டும் தூக்கம் வரவில்லை மொக்கராசுக்கு. நடுச்சாமம் கடந்துவிட்டது. எத்தனை முறைதான் புரண்டு படுப்பது? சட்டென்று எழுந்து உட்கார்ந்தான்.

மண்ணெண்ணெய் குடிக்குமென்று திரி குறைத்து வைக்கப்பட்டிருந்த லாந்தர் விளக்கு எச்சரித்துக் கொண்டேயிருந்தது எரியும் திரி தீரப்போகிறதென்று. நடைவாசலைவிட்டுக் குதித்தான். தாழ்வாரத்து மூலையில் ஒரு தூக்க மூட்டையாய் கிடந்த செல்லத்தாயி நோக்கி நடந்தான்.

அவளருகே உட்கார்ந்தான்; அழுதான். வலக் கரத்தால் அவள் தலைகோதினான். நடுங்கும் கரங்களால் அவளது நிறைமாத வயிறு தடவினான்.

"இன்னைக்கி நீ இன்னொருத்தன் புள்ளைய வயித்துல சொமக்கலாம். ஆனா என்னச் சொமந்த வயிறும் இதுதானே ஆத்தா?"-மொக்கராசின் கண்களில் திரண்டு கன்னத்தில் உடைந்தோடியது ஊமைக்கண்ணீர்.

ஒரு விடியக்கருக்கல். சில மனிதர்களைக் கோழிகளும், சில கோழிகளை மனிதர்களும் எழுப்பிவிடும் கிராமத்து அதிகாலை. இருக்கட்டுமா போகட்டுமா என்று சூரியனிடம் மல்லுக்கு நின்று இருட்டு, கட்டையன் காட்டுச் சோளக் காட்டுக்குள் நுழைந்தான் மொக்கராசு- பால் மாட்டுக்குப் புல்லறுக்க. ஏழுவயதிருக்கும் அப்போது அவனுக்கு. அவனோடு புல்லறுக்க வந்தார்கள் கூழ்மாயி- மோழையன் என்ற இரண்டு பேரும். மீசைகட்டத் தொடங்கிவிட்ட விடலைப் பயல்கள் அவர்கள்: ஆனால் விஷப் பயல்கள். அவர்கள் போகிறபோக்கில் எச்சில் துப்பினாலும் வீடு வெந்துபோகும் என்று ஊர் பேசும்.

அது ஐப்பசி மாதத்து ஆரம்பம். இந்த மழை மாதம்தான் அந்தக் கள்ளிக்காட்டுக்கு எத்தனை சோபிதம் சுமந்து வருகிறது! செம்மண் காட்டில் பச்சைத்தீப் பிடித்தமாதிரி வளர்ந்துநின்றது சோளத்தட்டை, இரவெல்லாம் மழையாடி அதிகாலை வெயிலாடி, குளித்துத் தலையுயர்த்தும் பருவப் பெண்ணாய்ச் செழித்துநின்றது கள்ளிக்காடு ஒரு வசீகரவனப்போடு. சோளக் காட்டுக்குள் செக்கச் சிவந்த பாப்பாத்திப் பூச்சிகள்-ஊர்ந்து செல்லும் ரத்தத்துளிகளாய். சோளத் தோகையில் உருண்டு தேங்கிநிற்கும் மழைத் துளிகள் காற்றின் தள்ளலுக்குத் தாங்காமல் "வந்துட்டேன் வந்துட்டேன்" என்று உருண்டு விழுந்து புல்லின் பனித்துளி உடைத்துச் சங்கமமாகும்.

(வளரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு கிழக்கில் தமிழே நிர்வாகமொழி தமிழிலேயே தேசியகீதம் பாட வேண்டும்



## சிவாஜிலிங்கம் தெரிவிப்பு

வடக்கு கிழக்கில் தமிழ் மொழியிலேயே தேசியகீதம் பாடப்பட வேண்டுமென தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கு மாகாணத்தில் தமிழ் மொழியே நிர்வாகமொழியாகக் காணப்ப டுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். பிரதமரும் ஜனாதிபதியும் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு சென்றால் , தமிழ் மொழியில் தேசிய கீதத்தை பாட வேண்டுமென அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

தேசிய பாதுகாப்பு தினத்தில் சிங்கள மொழியில் மட்டுமே தேசியகீதம் இசைக் கப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான பிரச்சினைகள் தமிழ் மக் களின் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தக் கூடும். வடக்கின் நிர்வாக மொழி தமிழ் எனவும் ஏன் தமிழ்மக்கள் தமிழ்மொழியில் தேசிய கீதத்தை பாட முடியாது எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (ஸ்ரீ-2)

# இலங்கையில் வருடாந்தம் 16 வயதுக்குட்பட்ட 3 ஆயிரம் சிறுமிகள் கர்ப்பம் தரிக்கின்றனர்

## குடும்பநல சுகாதார பிரிவின் வைத்தியநிபுணர் தகவல்

(கொழும்பு)

இலங்கையில் வருடாந்தம் 16 வயதுக்குட்பட்ட சிறுமிகளில் சுமார் 3 ஆயிரம் பேர் கர்ப்பம் தரிப்பதாக குடும்பநல சுகாதார பிரிவின் சமூக வைத்திய நிபுணர் டாக்டர் நில்மினி ஹேமச்சந்திர தெரிவித்துள்ளார்.

புள்ளி விபரங்களின்படி வருடாந்தம் இலங்கையில் 3 இலட்சம் தொடக்கம் 4 இலட் சத்து 20 ஆயிரம் பேர் கர்ப்பம் தரிக்கின்றனர். அவர்களில் இளம்பராய கர்ப்பிணிகளின் எண்ணிக்கை 25 ஆயிரம் ஆகும்.

இவர்களில் 7.2 சதவீதமானோர் 20 வயதுக்குட்பட்டவர்கள் எனவும் 10 சதவீதமானோர் 16 வயதுக்குட்பட்டவர்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் வேண்டப்படாத கர்ப்பங்களை தடுப்பதற்காக சிறுமிகளுக்கான உளவியல் அபிவிருத்தி மற்றும் விழிப்புணர்வுத் திட்டங்களை குடும்பநல சுகாதாரப் பிரிவுடன் இணைந்து சுகாதார அமைச்சு ஆரம்பித்துள்ளது.

பாடசாலை மாணவர்களுக்கு 6 ஆம் தரத்திலிருந்து இத்திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது. சிறுமிகள் இத்தகைய நிலையை எதிர்கொள்வதை தடுப்பதற்கு ஆசிரியர்கள் பெற்றோர்களுக்கிடையிலான நல்லுறவு , சிறார்களுக்கு மேலும் ஆன்மீக சூழலை ஏற்படுத்துதல் , பெற்றோர்கள் முன்னுதாரணமாக விளங்குதல் என்பவை அவசியமானதாகக் கருதப்பட வேண்டும் என டாக்டர் ஆயிஷா லொக்குபால சூரிய தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# இருநாட்களுக்கு ஒருமுறை முட்டைகள் இறக்குமதி

(கொழும்பு)

இருநாட்களுக்கு ஒருமுறை இந்தியாவில் இருந்து ஒரு மில்லியன் முட்டைகளை இலங்கைக்கு இறக்குமதி செய்யவுள்ளதாக வர்த்தக நுகர்வோர் துறை அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

தேசிய வர்த்தக சந்தையில் முட்டையின் விலையை மேலும் குறைவடைய செய்யும் நோக்கிலேயே முட்டைகள் இவ்வாறு இறக்குமதி செய்யப்படவுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

நுகர்வோர் கூட்டுறவு மொத்தவிற்பனை நிலையங்களில் நேற்று முன்தினம் முதல் முட்டையை 12 ரூபாவுக்கும் மொத்த விலையில் 11 ரூபாவிற்கும் பெற்றுக் கொள்ள முடியும் என அவர் குறிப்பிட்டார். (ஸ்ரீ-4)

## ஸ்ரீ அம்மா பகவான் பாதபூஜை நிகழ்வு

ஸ்ரீ அம்மா பகவான் பாத பூஜை நிகழ்வு எதிர்வரும் சனிக்கிழமை முதலாம் திகதி பி.ப 2.30 மணிக்கு சுழிபுரம் ஸ்ரீ அம்மா பகவான் சற்சங்க பிரார்த்தனை மையத்தில் நடத்தப்படவுள்ளது.

இதில் சகல பக்தர்களையும் வருகை தந்து பாத தரிசனத்தை பெற்று ஆனந்தப் பேறை பெற்றுக் கொள்ளுமாறு பிரார்த்தனை மையத்தினர் அழைக்கின்றனர். (ஸ்ரீ-3)

# தென்னை அபிவிருத்தி நடவடிக்கையில் ஜனவரி முதல் சிவில் பாதுகாப்பு படையினர்

தென்னை செய்கை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு சிவில் பாதுகாப்புப் படையினர் ஈடுபடுத்தப்படவுள்ளனர். இதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது.

இந்த நடவடிக்கைகளுக்குத் தேவையான அறிவுறுத்தல்களை பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ வழங்கியுள்ளதாக சிவில் பாதுகாப்புத் திணைக்கள பணிப்பாளர் நாயகம் ரியர் அட்மிரல் ஆனந்த பீரிஸ் தெரிவித்தார்.

பராமரிப்பு அற்ற நிலையில் காணப்படும் தெங்கு செய்கை நிலங்களை அமைச்சு எமது பொறுப்பில் தரும் பட்சத்தில் , அவற்றை சிறந்த முறையில் மேம்படுத்திக் கொடுப்பதுடன் தெங்கு செய்கையை மேலும் அபிவிருத்தி செய்ய முடியும் என்றும் இது தொடர்பாக தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சர் ஜகத் புஸ்பகுமாரவுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதாகவும் பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டார்.

இதற்கான நடவடிக்கையை ஜனவரி முதல் ஆரம்பிக்கத் தயார் நிலையில் உள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். இதே வேளை தெங்கு அபிவிருத்திசபையின் பாதுகாப்புக்கு சிவில் பாதுகாப்புப் படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று ரியர் அட்மிரல் ஆனந்த பீரிஸ் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

**தொட்டால்வாடி/தொட்டாற்சிணுங்கி**

Botanical Name - Mimosa pudica
Family - Mimosaceae
Engl - Sensitive plant
Sinh - Nidikumba

இது ஒரு மீற்றர் உயரம் வரை வளரக் கூடிய புதர்ச்செடி, தண்டு மற்றும் இலைக் காம்புகள் முட்களால் மூடியவை. இலைகள் இருமுறை கிளைத்தவை (Bipinnate) இறகு வடிவான கூட்டிலை, சிற்றிலைகள் உணர்வு மிகுந்தவை, தொட்டால் மூடிக் கொள்கின்றதன்மை உடையது.

இதில் 10 தொடக்கம் 20 ஜோடி சிற்றிலைகள் உள் ளன, பஞ்சுபோன்ற மலர்கள் றோஸ் நிறத் தில் கோணவடிவாக அமைந்தவை, கனிகள் தட்டையானவை, சிறியவை. உறைமீது பல முட்கள் போன்ற வளரிகள் உள்ளன. விதைகள் 3 தொடக்கம் 5 வருடம் முழுவதும் மலர்வன.

**பரம்பலும் இனவிருத்தியும்.**

இச்செடியானது வெப்ப மற்றும் மித வெப்ப மண்டல பகுதிகளில் காணப்படும். ஈரமும், மிகவெப்பமும் உள்ள தரிசு நிலங்கள் புதர்களில் வளர்கின்றன.

**மருத்துவப் பயன்கள்:**

- இதன் இலைகளை சேகரித்து நன்கு கழுவி அரைத்து பசையாக்கி (Paste) கட்டிகள் மீது பற்றிடலாம்.
- நன்கு கழுவிய இலைகளின் சாற்றினால் புண்களைக் கழுவிவர புண்கள் விரைவில் ஆறும்.
- சீழ்பிடித்த புண்களிற்கு தொட்டாற்சுருங்கி இலைகளை பசைபோல அரைத்து புண்களை சுத்தப்படுத்திய பின்பு பற்றிட புண்கள் விரைவில் ஆறும்.
- இதனுடைய வேர்களை சேகரித்து நன்கு கழுவி சுத்தப்படுத்திய பின் சிறுசிறு துண்டுகளாக நறுக்கி 35 கிராம் அளவு எடுக்க வேண்டும். பின் 4 மடங்கு நீர் விட்டு $1/4$ பங்காக குடிநீர் காய்ச்சி 30 தொடக்கம் 60 மில்லி அளவு குடிக்கக் கொடுக்க சிறுநீரகக் கோளாறுகள் நீங்கும்.
- இதன் இலைகளையும், வேரையும் சம அளவாக எடுத்து குடிநீர் செய்து 30 தொடக்கம் 60 மில்லி அளவு எடுத்து காலை, மாலை குடிக்கக் கொடுக்க நீரிழிவு கட்டுப்படும். அல்லது இலைகளையும், வேர்களையும் சேகரித்து கழுவி சிறுசிறு துண்டுகளாக நறுக்கி நிழலில் உலர்த்தி, பொடி செய்து 4 தொடக்கம் 8 கிராம் அளவு எடுத்து காலை, மாலை வெந்நீரில் கலந்து எடுத்துவர நீரிழிவு நோய் கட்டுப்பாட்டில் வரும்.
- இதன் இலைகளை இட்டு நீரில் கொதிக்கவைத்து காய்ச்சி நாரிவலிக்கு ஒற்றடமிட வலி தணியும்.
- இவ்விலைகளானது வசிய மூலிகையாகவும் பயன்படுத்தப்படுகின்றது.





ஆனால் முக்கியவிடயம் என்னவென்றால், இத் தொட்டாற்சுருங்கி எனும் மூலிகையானது பதில் மூலிகையாக (**Substitute**) பயன்படுத்தப்படுகின்றது. மேற்கூறிய மருத்துவ செய்கைகளை முக்கியமாக கொண்டுள்ள தூய இன மூலிகை தீண்டவாடி ஆகும். இதனை முட்குத்தி என்றும் அழைப்பர்.

**தீண்டவாடி**

Botanical Name - Biophytum sensitirum
Family - Oxalidaceae

தீண்டவாடி தொட்டால்வாடியிலிருந்து வேறுபட்ட மூலிகையாகும். இது வேறு, தாவரவியற்பெயர் குடும்பத்தைச் சேர்ந்தது. இது ஓர் ஆண்டுச்செடியாகும். 2.5 தொடக்கம் 25 செ.மீ உயரமுடையது.

மழைகாலங்களில் களைச்செடியாக வெப்ப பிரதேசங்களில் பரம்பலை அதிகம் காணலாம்.

இலைகள் 3.8 தொடக்கம் 12.7 செ.மீ நீளமுடையது. 3 தொடக்கம் 12 சோடி சிற்றிலைகள் காணப்படும். இலைகள் உணர்வு மிகுந்தவை. பிரகாசமான, மினு மினுப்பான மஞ்சள் நிறப்பூக்களைக் கொண்டது.

தொட்டால் வாடிக்கு கீழ்க் குறிப்பிட்ட மருத்துவச் செய்கைகட்கு சிறந்த மூலிகை தீண்டவாடியாகும். மேலும் சிறுவர்களுக்கு ஏற்படும் வலிப்பு நோய்க்கு இதன் இலை, வேர்களை முன்போல குடிநீர்செய்து 5 தொடக்கம் 10 மில்லி அளவு பயன்படுத்தலாம்.

ஆஸ்மா நோயிற்கு இலைகளை மாத்திரம் சேகரித்து குடிநீர் காய்ச்சி பருகக் கொடுக்கலாம்.

குறிப்பு:- இதன் முதிர்ந்த இலைகளுக்கு இன்சுலின் போல செயற்படும் தன்மையுண்டு.

**A Saline extract of the mature leaves Showed hypoglycaemic activity in rabbits.** (the wealth of India)
(Vol-11-Page 151)

**டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S.)**
**சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை,**
**யாழ். பல்கலைக்கழகம், கைதடி.**

எனவே தூய இன மூலிகைகளை உருவவியல் ரீதியாக இனங்கண்டு மருந்துகளில் பயன்படுத்தும்போது தான் சித்தர்கள் கூறிய மருத்துவப் பயன்களைப் பெறமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்கள் ஒருமித்த குரலில் தேவைகளை முன் வைக்க வேண்டும்

## அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவிப்பு



(கொழும்பு)

தமிழ் மக்கள் அரசியல் ரீதியாக தமது தேவைகளை ஒரு குழுவாக ஆராய்ந்து ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கும் பட்சத்தில் அது பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் என விஞ்ஞான அலுவல்கள் சிரேஷ்ட அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

அமரத்துவம் அடைந்த இலங்கையின் புகழ்பூத்த கலைஞர்களை நினைவு கூரும் நோக்கில் கடந்த 25ஆம் திகதி கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு மேலும் உரையாற்றிய அவர்,

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை ஆராயும் உபகுழுவில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் 3 உறுப்பினர்களும் தமிழ்க் கட்சிகளின் அரங்கத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் மூவரும் அடங்குகின்றனர்.

இவ் உறுப்பினர்கள் ஒன்றிணைந்து தமிழ் மக்களின் பிரச்சினைகள், அரசியல் தேவைகள் போன்றவற்றை ஆராய்ந்து ஜனாதிபதியிடம் கையளிக்க வேண்டும்.

ஜனாதிபதி அதனைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துத் தீர்வைப் பெற்றுக்கொடுக்க முடியும்.

மாகாண மட்டத்திலும் கிராமிய மட்டத்திலும் மக்கள் சபை உருவாக்கப்பட்டு அவற்றுக்குரிய நிர்வாகம், அதிகாரம். நிதி வசதிகள் போன்றவை வழங்கப்படும்.

இதற்குரிய திட்டங்கள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும் எனக் கூறினார். (ஸ்ரீ-2)

# நாடும் நடப்பும்

## கூடப்பிறந்தவர்கள்

இலங்கா தாயே! உன்மடியில்
கூடப் பிறந்த வர்களோடு
கூடவே நாம் பிறந்தோம்
கூடப் பிறந்தவர்கள் கூடிவாழ விடுவதில்லை
கூடப் பிறந்ததனால்
கூடப் பிறந்தது குற்றமன்றோ?
கூடிவாழ நினைக்கின்றோம்
கூடி யவரெம்முடன் கூட விரும்பவில்லை
கூடவே பாரதமும் கூடிக்கொல்கின்றதே
கூடிக் கொல்கின்ற, கூட்டமாய் தொலைகின்ற
வேண்டாம்.... தாயே உன் மடியில்
செந்தணலும் குளிர் நீரும்
கூடவே கூடிற்றால் கூடிவாழ யார் இருப்பர்

அறியாதவன்

# இலங்கைக்கான பயணங்களை தவிர்க்குமாறு மாலைதீவு எச்சரிக்கை

(கொழும்பு)

பன்றிக் காய்ச்சல் அபாயம் காரணமாக இலங்கைக்கான பயணங்களை தவிர்க்குமாறு மாலைதீவு அரசாங்கம் அந்நாட்டு மக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

அவசரமான தேவைகளை தவிர இலங்கைக்கான பயணங்களை தவிர்க்குமாறு அரசாங்கம் பயண எச்சரிக்கை விடுத்துள்ளது.

இலங்கையில் பன்றிக் காய்ச்சல் காரணமாக 22 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன் 300 பேர் நோய்த் தொற்றுக்கு இலக்காகியுள்ளனர்.குறிப்பாக கர்ப்பிணித் தாய்மார், குழந்தைகள் மற்றும் முதியவர்கள் இலங்கைக்கான பயணங்களை தவிர்க்குமாறு கோரப்பட்டுள்ளது.

மாலைதீவுக்குள் பிரவேசிப்போருக்கு காய்ச்சல் நோய் அறிகுறி காணப்பட்டால் உடனடியாக வைத்தியரை அணுகுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# வகுப்பறையில் ஆசிரியர் இல்லாத வேளையில் தொலைக்காட்சி ஊடான கற்பித்தல்

## கல்வி அமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

பாடசாலை வகுப்பறையில் ஆசிரியர்கள் இல்லாத வேளையில் தொலைகாட்சி ஊடகங்களைப் பயன்படுத்தி மாணவர்களுக்கு பகுதிநேர கல்வி நடவடிக்கைகளை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகச்சந்திப்பு ஒன்றின் போது இதனைத் தெரிவித்துள்ளார்.

தற்போது இந்த வேலைத்திட்டம் சில இடங்களில் பரீட்சாத்தமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கல்வித்துறையில் ஈடுபட்டுள்ள அனைத்து தரப்பினரின் நலன்கருதி எதிர்காலத்தில் இதனை முழுமையாக நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# வடகிழக்கில் புதிய சிறுவர் இல்ல நிர்மாணம் கைவிடப்பட்டது

(கொழும்பு)

வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள சிறுவர் இல்லங்களைப் புதிதாக நிர்மாணித்தல் தொடர்பான செயற்பாடுகள் தற்காலிகமாகக் கைவிடப்பட்டுள்ளது.

தன்னார்வ நிறுவனங்கள் இப்பகுதிகளில் அளவுக்கதிகமாகச் சிறுவர் இல்லங்களை நிர்மாணித்தமையே இதற்குக் காரணமென நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புத் திணைக்களத்தின் ஆணையாளர் சரத் அபே குணவர்த்தன குறிப்பிட்டார்.

அத்துடன் இதுவரை பதிவு செய்யப்படாதுள்ள சிறுவர் இல்லங்களைப் பதிவு செய்யும் நடவடிக்கைகளும் தற்போது மேற்கொள்ளப்படுவதாக அவர் தெரிவித்தார்.

சிறுவர்களை இல்லங்களில் சேர்ப்பதைக்குறைப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு சிறுவர் இல்லங்களை நிர்மாணிக்க ஆர்வமுள்ள தன்னார்வ அமைப்புக்களிடம் வலியுறுத்துவதாகவும் ஆணையாளர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2010.12 29

★ 1170 - இங்கிலாந்து, கண்டர்பரி ஆயர் தோமஸ் பெக்கெட் அவரது தேவாலயத்தில் வைத்து இரண்டாம் ஹென்றி மன்னனின் நான்கு ஆதரவாளர்களால் படுகொலை செய்யப்பட்டார்.

★ 1690 - இத்தாலியின் அன்கானோர் நகரில் நிலநடுக்கம் ஏற்பட்டது.

★ 1778 - அமெரிக்கப் புரட்சிப் போர்: 3 ஆயிரத்து 500 பிரித்தானிய போர்வீரர்கள் ஜோர்ஜியா மாநிலத்தின் சவான்னா நகரைக் கைப்பற்றினர்.

★ 1813 - 1812 போர்: பிரித்தானியப் படைகள் நியூயோர்க்கில் பஃபலோ என்ற நகரை தீக்கிரையாக்கினர்.

★ 1835 - மிசிசிப்பி ஆற்றின் கிழக்கேயுள்ள செரோக்கீ இன மக்களின் நிலங்கள் அனைத்தையும் ஐக்கிய அமெரிக்காவுக்குக் கொடுக்கும் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.

★ 1845 - டெக்சாஸ் ஐக்கிய அமெரிக்காவின் 28ஆவது மாநிலமாக இணைந்தது.

★ 1851 - அமெரிக்காவின் முதலாவது இளைய கிறிஸ்தவர்களின் அமைப்பு (வை.எம்.சி.ஏ) பொஸ்டனில் அமைக்கப்பட்டது.

★ 1876 - ஐக்கிய அமெரிக்காவின் ஒஹையோ மாநிலத்தில் தொடரூந்து பாலம் இடிந்து வீழ்ந்ததில் 92 பேர் கொல்லப்பட்டு 64 பேர் காயமடைந்தனர்.

★ 1890 - தென் டகோட்டாவில் ஐக்கிய அமெரிக்கப் படைகள் பெண்கள், குழந்தைகள் உட்பட 400 ஆதிகுடிகளை படுகொலை செய்தனர்.

★ 1891 - தோமஸ் அல்வா எடிசன் வானொலிக்கான காப்புரிமம் பெற்றார்.

★ 1911 - சுன் யாட்-சென் சீனக் குடியரசின் முதலாவது ஜனாதிபதியானார்.

★ 1911 - மங்கோலியா கிங் வம்சத்திடம் இருந்து விடுதலை பெற்றது.

★ 1930 - அலகாபாத் நகரில் கூட்டம் ஒன்றில் உரையாற்றிய கவிஞரும், மெய்யியலாளருமான முகமது இக்பால் முஸ்லிம்களுக்கென தனிநாடு கோரிக்கையைக் கொண்ட தனது இரு-நாடுகள் கொள்கையை முன்வைத்தார்.

★ 1937 - ஐரிய சுதந்திர நாடு புதிய அரசியலமைப்பை அறிமுகப்படுத்தி அயர்லாந்து குடியரசு எனப் பெயரை மாற்றியது.

★ 1940 - இரண்டாம் உலகப் போர்: லண்டன் நகரின் மேல் நாசி ஜெர்மனியர் தீக்குண்டுகள் வீசியதில் 200 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1972 - புளோரிடாவில் மயாமி விமான நிலையத்தில் அமெரிக்க விமானம் ஒன்று வீழ்ந்ததில் 101 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1975 - நியூயோர்க் நகர விமான நிலையத்தில் குண்டு ஒன்று வெடித்ததில் 11 பேர் கொல்லப்பட்டு 74 பேர் காயமடைந்தனர்.

★ 1987 - 326 நாட்கள் விண்வெளியில் பயணித்த சோவியத் விண்வெளி வீரர் யூரி ரொமானின்கோ பூமி திரும்பினார்.

★ 1989 - ஹொங்கொங் வியட்நாமிய அகதிகளை பலவந்தமாக வெளியேற்றியதை அடுத்து அங்கு கலவரம் மூண்டது.

★ 1993 - உலகின் மிகப்பெரிய செம்பினாலான புத்தர் சிலை ஹொங்கொங்கில் அமைக்கப்பட்டது.

★ 1996 - குவாத்தமாலாவில் அந்நாட்டு அரசுக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையில் அமைதி ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதில் 36ஆண்டு கால உள்நாட்டுப்போர் முடிவுக்கு வந்தது.

★ 1998 - கம்போடியாவில் 1970 களில் ஒரு மில்லியன் மக்கள் கொலை செய்யப்பட்டமைக்கு கெமர் ரூச் தலைவர்கள் மன்னிப்புக் கேட்டனர்.

★ 2001 - பெருவின் தலைநகர் லீமாவில் பெரும் தீ பரவியதில் 274 பேர் கொல்லப்பட்டனர்.

### பிறப்புகள்

★ 1937 - மாமூன் அப்துல் கயூம், மாலைதீவுகளின் முன்னாள் ஜனாதிபதி

★ 1942 - ராஜேஷ் கண்ணா, இந்தி நடிகர்

★ 1965 - சி.ஜெயசங்கர், ஈழத்து எழுத்தாளர்

★ 1971 - பிறட் ஹொட்ஜ், அவுஸ்திரேலியத் துடுப்பாட்ட வீரர்.

### இறப்புகள்

★ 1924 - கார்ள் ஸ்பிட்டெலெர், நோபல் பரிசு பெற்ற சுவிட்சர்லாந்து எழுத்தாளர் (பி. 1845)

★ 2004 - ஜூலியஸ் அக்செல்ரொட், மருத்துவத்துக்கான நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (பி. 1912)

**1997-ஹொங்கொங்கில் கோழிகளுக்கு தொற்றுநோய் பரவியதை அடுத்து அங்கிருந்த 1.25 மில்லியன் கோழிகள் கொல்லப்பட்டன.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2011 புத்தாண்டு பலன்கள்




**(மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள் திருவாதிரை, புனர்பூசம்1,2,3ஆம் பாதங்கள்)**

*காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ள வேண்டும் என்று நினைக்கும் மிதுன இராசி நேயர்களே!*

புத்தாண்டு உங்களுக்கு போற்றும் விதத்தில் வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கப் போகிறது. பொறுமையை மட்டும் கடைபிடித்தால் பெருமையை நீங்கள் காணலாம். உங்கள் இராசிநாதன் புதன் என்பதால், எப்பொழுதும் உங்களுக்கு ஒரு தூண்டுதல் தேவை. அது ஆணாகவும் இருக்கலாம் பெண்ணாகவும் இருக்கலாம் அப்படி இருந்தால் தான் உங்களுக்கு முன்னேற்றங்கள் விரைவில் ஏற்படும்.

நான்காமிடத்தில் சுக ஸ்தானத்தில் சனி இருந்து, குருவின் பார்வையோடு இந்த ஆண்டு பிறப்பதால் தான் உங்களுக்கு நல்ல பலன்கள். சனி மட்டும் நான்கில் இருந்து அர்த்தாஷ்டமச் சனியாக அமைந்தால், கடமையைச் செய்வதில் கால்வாசி நேரத்தை யாவது கடவுள் வழிபாட்டிற்கென்று ஒதுக்கினால் தான் காரிய வெற்றி உருவாகும்.

இந்தாண்டும் உங்களுக்கு ஜென்மத்தில் கேது சஞ்சரிக்கிறார். எனவே, நிம்மதி கிடைக்குமா? என்று நீங்கள் நினைக்க வேண்டாம். கேதுவிற்குரிய அதிதேவதையாக விநாயகப் பெருமான் விளங்குவதால், அவரை வழிபட்டு, காரியத்தைச் செய்தாலே, அளவில்லா வெற்றி கிடைக்கும். ஆறு, குளக்கரை முதல் அகில உலகெங்கும் வீற்றிருந்து அருள் பாலிப்பவர் விநாயகர். அவர் நமக்கு கேட்ட வரங்களைத் தர, வீற்றிருக்கிறார். அவரிடம் உங்கள் கோரிக்கைகளைச் சொல்லுங்கள். நிறைவேறும்.

புத்தாண்டில் உள்ள கிரக நிலையின் கட்டத்தையும், சுயஜாதகத்தில் உள்ள கட்டத்தையும் ஒப்பிட்டு பார்க்க வேண்டும். அவை இரண்டும் இணைந்து செயற்பட்டால், துணிந்து காரியங்களைச் செய்யலாம். இல்லையேல், பணிந்து வணங்கி, பரிகாரங்களைச் செய்வதன் மூலம் பலன் பெறலாம்.

உங்கள் இராசிநாதன் புதன் என்பதால், அதற்குரிய எண் ஐந்தாகும். உங்கள் சுயஜாதகத்தில் புதன் இருக்கும் பாதசார அடிப்படையில் ஆராய்ந்து, அது நவாம்சத்தில் இருக்கும் நிலையறிந்து, அதற்குரிய கிரகத்தின் ஆதிக்க எண்ணில் உங்கள் பெயரையும், உங்கள் தொழில் நிலையத்தின் பெயரையும் அமைத்துக் கொண்டால், ஒளிமயமான எதிர்காலம் உங்களுக்கு அமையும்.

ஒரே கருத்தை நீங்கள் ஆதரித்தும் பேசுவீர்கள். மறுத்தும் பேசுவீர்கள். எல்லா இடங்களிலும் தாங்கள் யார் என்பதை உணர்த்தியே காரியம் சாதித்துக் கொள்வீர்கள். கொள்கைப் பிடிப்பு உங்களிடம் குறைவாகவே இருக்கும். யாரையும் நம்பிச் செயற்பட மாட்டீர்கள். நம்பிக்கைக்குரியவர்கள் நல்ல விதமாக நடந்து கொள்கிறார்களா? என்பதை அறிய மேலும் ஒருவரை நியமிப்பீர்கள்.

உங்களுக்கு இந்தப் புத்தாண்டில் குருவின் பதினொன்றாம் இடத்துச் சஞ்சாரமும், இராகு-கேதுக்களின் ஆறு பன்னிரெண்டாமிடத்து சஞ்சாரமும், சனியின் ஐந்தாமிடத்துச் சஞ்சாரமும் எப்படி அமையப்போகிறது என்பதைப் பற்றி பார்ப்போம்.

# உங்களுக்கு எப்படி?

**01.01.2011 முதல் 07.05.2011 வரை**

இக்காலத்தில் பத்தாம் இடத்தில் குரு சஞ்சரிக்கிறார். நான்காமிடத்தில் சனி வலுப்பெறுகிறார். ஜென்மத்தில் கேதுவும், ஏழில் இராகுவும் வீற்றிருக்கிறார்கள். நான்கு கேந்திரங்களிலும் கிரகங்கள் சஞ்சரித்து கேந்திராதிபத்ய யோகத்தை உருவாக்குகிறது. குருவின் பார்வையால், கொடிகட்டிப் பறந்த குடும்பப் பிரச்சினைகள் தீரும். சண்டை, சச்சரவுகளை சராசரியாக சந்தித்து வந்த நீங்கள் இனி அண்டை அயலாருடன ஆதரவாகப் பேசி, காரியங்களைச் சாதித்துக் கொள்வீர்கள்.

பணப்புழக்கம் அதிகரிக்கும். பாக்கிகள் பலவருடங்களாக வசூலாகவில்லையே என்ற கவலை இனி அகலும். ஆக்கபூர்வமாக சிந்தித்து, அடுத்தடுத்து என்ன செய்யலாம் என்பதை திட்டமிட்டுக் கொள்ளுங்கள். திட்டமிட்டுச் செயற்படுவதுதான் உங்கள் வெற்றியின் இரகசியமாகும். குருவின் பார்வை பலத்தால் சுகஸ்தானமும், ரோக ஸ்தானமும் புனித மடைவதால், சுகங்களும், சந்தோஷங்களும் வந்து சேரும்.

பயணங்களால் பலன் கிடைக்கும். கடல் பயண வாய்ப்புகளுக்காக காத்திருப்பவர்களுக்கு அது கைகூடுவதற் கான அறிகுறிகள் தோன்றும். உடல் நலத்திற்கென்று செலவிட்ட தொகை இனி குறை யும். குரு வழிபடு உங்கள் குழப்பங்களைத் தீர்க்கும்.

**08.05.2011 முதல் 31.12.2011 வரை**

இக்காலத்தில் குரு, இராகு-கேது, சனி ஆகிய கிரகங்கள் ஒன்றன்பின் ஒன்றாக, பெயர்ச்சியாகிக் கொண்டே வருகின்றன. முதலில் பெயர்ச்சியாகும் குரு உங்கள் இராசிக்கு பதினொன்றாம் இடமான லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போகிறார். எனவே, பணப்புழக்கம் அதிகரிக்கும். அதன் பார்வை பதியும் இடங்களான 3, 5, 7 ஆகிய இடங்கள் புனிதம் அடைகின்றன.

எனவே, உடன்பிறப்புகள் வழியில் இது வரை ஏற்பட்ட மனக்கசப்புகள் மாறும். உற்றார், உறவினர்கள் உங்கள் பணிக்கு ஒத்துழைப்பு செய்ய முன்வருவர். பெற்றோர்களும், உங்களுக்கு பின்னணியாக இருப்பர். பூர்வீக சொத்து தகராறுகள் நல்ல முடிவுக்கு வரும். பொன், பொருள் சேர்க்கைக்கும், அஸ்திவாரமிடுவீர்கள். வங்கிச் சேமிப்பு உயரும். வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதில் குழந்தைகளின் ஒத்துழைப்பும் கிடைக்கும். பிள்ளைகளுக்கு வேலை கிடைக்கவில்லையே, வெளிநாடு செல்லவில்லையே என்று கவலைப்பட்ட நீங்கள், இனி அவர்களுக்காக எடுத்த முயற்சிகளில் அனுகூலம் கிடைத்து ஆனந்தப்படுவீர்கள். உங்கள் சொற்களுக்கு இனிக் குழந்தைகள் மதிப்புக் கொடுபபர். பெண்குழந்தைகள் பிரச்சினையில் இருந்து விடுபடுவர்.

சப்தம ஸ்தானத்தைக் குரு பார்ப்பதால், கல்யாண வாய்ப்புகள் கைகூடி வரும். களத்திரதோஷங்களால் காலம் காலமாகக் கல்யாணம் ஆகாமல் இருந்தவர்கள் கூட இனி வளத்தோடும், நலத்தோடும் வாழ்க்கையை அமைத்துக் கொள்வார்கள். அந்நிய தேசப் பயணங்கள் எதிர்பார்த்தபடி அமையும். அதன் தொடர்பாக வரும் தொலைபேசி வழித்தகவலும் நிம்மதி தரும்.

மே 14ஆம் திகதி விருச்சிக இராசியில் இராகுவும், ரிஷபத்தில் கேதுவும் சஞ்சரிக்கப் போவதால் அஷ்டலட்சுமி யோகம் உங்களுக்கு செயற்படப் போகிறது.6இல் இராகுவும், குரு கேந்திரத்திலும் இருக்கும்பொழுது ஏற்படும் இந்த யோகம் அருமையான யோகமாகும். வீடுகட்டும் முயற்சியில் வெற்றி காண்பீர்கள். விரும்பியபடியே நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

தொழில் வளர்ச்சி மேலோங்கி, தொகை எதிர்பார்த்தபடியே வந்து சேரும். அர்த்தாஷ்டமச் சனியின் ஆதிக்கம் இருப்பதால், பணம் வந்த மறுநிமிடமே செலவாகலாம். எனவே அவற்றை சுப விரயங்களாக மாற்றிக்கொள்வது நல்லது. புது யுக்திகளைக் கையாண்டு தொழில் விருத்தியைப் பெருக்கிக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் எதிர்பாராத விதத்தில் பதவி உயர்வு வந்து சேரும். கேதுபலத்தால் ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். குலதெய்வ வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

கொடுக்கும் கரம் உங்களுடைய கரம் என்பதை நிரூபிக்க தெய்வத் திருப்பணிகளுக்கு அள்ளிக் கொடுப்பீர்கள். நீண்ட தூரப் பயணங்கள் வந்து சேரும். நிகழ்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள வரும் வாய்ப்புகளை எல்லாம் உபயோகப்படுத்திக் கொள்ளுங்கள். பெண் வழிப்பிரச்சினைகள் வந்தாலும், அதைச் சமாளித்து விடுவீர்கள். வங்கிக்கடன் அனைத்தையும் அடைத்து வளர்ச்சியின் முதல்படியில் ஏறத் தொடங்குவீர்கள்.

இராசிநாதன் புதனைப் பலப்படுத்தவும், உச்ச சனியின் ஆதிக்கத்தால் அச்சமில்லாத வாழ்க்கை அமையும். சனி பகவான் வழிபாட்டையும் முறையாக மேற்கொள்ளுங்கள். கரு நிறக்காகம் ஏறிக் காசினி தன்னைக் காக்கும் என்ற சனிபகவான் கவசத்தை சந்நிதியில் பாடினால் நிம்மதி கிடைக்கும்.

டிசம்பர் 21ஆம் திகதி துலாம் இராசியில் சனி உச்சம் பெறப்போகிறார். அதன் பார்வை 2, 7, 11 ஆகிய இடங்களில் பதிவதால் உடன் பிறப்புகள் வழியில் ஒருசில கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டு அகலும். அதன் பார்வை பலத்தால் வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகளுக்கு வள்ளல்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். குடும்பத்தில் இருந்த குழப்பங்

**சிவல்புரிசிங்காரம்**

கள் அகல முக்கியப் புள்ளிகள் உங்களுக்கு முன்வந்து உதவுவர். திருமணப் பொருந்தம் பார்த்து சலித்துப் போய் இருந்த உங்களுக்கு இனி வரும் ஜாதகங்கள் பொருந்தி வீட்டில் மங்கல ஓசை கேட்கப் போகிறது. 8, 9இற்கு அதிபதியான சனி இலாப ஸ்தானத்தைப் பார்ப்பதால், தொழில் கூட்டாளிகள் திடீரென விலக நேரிடலாம். இருந்தாலும், புதிய கூட்டாளிகள் வந்திணைந்து உங்கள் பொருளாதார வசதியைப் பெருக்கிக் கொடுப்பர்.

(தொடரும்)






வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் அடுத்த ஆண்டு மேற்கொள்ளப்படவிருக்கும் விளையாட்டு நிகழ்வு தொடர்பான திட்டங்களை ஆராயும் கலந்துரையாடல் கடந்த 26ஆம் திகதி வேம்படி மகளிர் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.இந்நிகழ்வில் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எல்.இளங்கோவன் உரையாற்றுவதையும் அருகில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, வடமாகாண கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் கலந்துகொண்ட விளையாட்டுத்துறை உதவிக் கல்விப்பணிப்பாளர், விளையாட்டு உத்தியோகத்தர்கள் ஆகியோரையும் படங்களில் காணலாம். (படங்கள் :-என்.குமார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்தகபுரம் மக்களின் கோரிக்கைகளும் தேவைகளும் விரைவாக நிறைவேற்றப்படும்

## அமைச்சர் டக்ளஸ் உறுதியளிப்பு

(கொழும்பு)

வலிகாமம் வடக்கு வித்தகபுரம் மக்களை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருமான டக்ளஸ்தேவானந்தா நேற்று முன்தினம் சந்தித்து அவர்களது தேவைகள், கோரிக்கைகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டார்.

பன்னாலை சேர் கனகசபை அ.த.க. பாடசாலையில் நடைபெற்ற இச் சந்திப்பில் அப்பகுதியில் மீள் குடியேறிய மக்களுக்கு 25ஆயிரம் ரூபா வழங்குவது என்றும் முதல் கட்டமாக 5ஆயிரம் ரூபா அடுத்த வாரம் வழங்கப்படும் என்றும் தெரிவித்தார்.

அத்துடன் அப்பகுதியில் மேற்கொள்ளப்படவுள்ள வீட்டுத்திட்டம், மின்சாரம், போக்குவரத்து வீதி திருத்தம் உள்ளிட்ட தேவைகளை விரைவாக செய்து தருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அம்பனை-கீரிமலை வீதி போக்குவரத்துத் தடை தொடர்பிலும் பாதுகாப்பு உயர் மட்டத்துடன் கலந்துரையாடி தற்காலிக உடனடி ஏற்பாடு ஒன்று செய்து கொடுத்திருப்பதுடன் இன்னும் சில வாரங்களில் இவ் வீதியைத் திறப்பதற்கான நடவடிக்கையினையும் மேற்கொண்டார்.

அத்துடன் அப்பகுதியில் காணப்படும் பாதுகாப்பு மண் அணைகளையும் நேற்று முதல் அப்புறப்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் அவர் விடுத்துள்ளார்.

அத்துடன் இப்பகுதி வீதிகளை புனரமைப்பதற்கும் மின் வசதிகளை வழங்குவதற்கும் கிணறுகளை சுத்தம் செய்து குடிநீர் வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் விரைவில் நடவடிக்கைகளை எடுக்க அதிகாரிகளுக்கு ஆலோசனைகளை வழங்கினார்.

தற்காலிக வீடுகளை அமைத்துக்கொள்வதற்கு கூரைத்தகடுகள், சீமெந்து மற்றும் தடிகளை வழங்கவும் விவசாய உபகரணங்களை வழங்கவும் அதேநேரம் காணி உறுதிகள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுப்பதற்குமான பணிப்புரைகளையும் உரிய அதிகாரிகளுக்கு வழங்கினார்.

இக்கலந்துரையாடலில் யாழ். மேலதிக அரசாங்க அதிபர் ரூபினி வரதலிங்கம், தெல்லிப்பழை பிரதேச செயலர் முரளிதரன் உள்ளிட்ட பல்வேறு துறைசார்ந்த அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் அதிகாரிகளும் உத்தியோகத்தர்களும் பொது மக்களும் கலந்துகொண்டனர்.

(ஸ்ரீ-2)

## சித்திரத் தேர் வெள்ளோட்டம்

இணுவில் மருதனார்மடம் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோயில் சித்திரத்தேர் வெள் ளோட்ட விழா எதிர்வரும் முதலாம் திகதி சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் 11மணிக்கு கணபதிபூசை, சுத்தி புண்ணியாகம், தேவஆராதனை, கலசஸ்தாபனம் என்பன இடம்பெற்று தொடர்ந்து வெள்ளோட்டம் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வினைத் தொடர்ந்து மங்கல விளக்கேற்றல், இறைவணக்கம், வரவேற்புரை, ஆசியுரை, அருளுரை, வாழ்த்துரை, பாராட்டுரை என்பன இடம்பெற்று சித்திரத் தேரை உருவாக்கிய ஆசாரியர் விஸ்வபிரம் ஸ்ரீ தியாகராஜா பரமசாமிக்கு *சித்திர கலாசூரி* எனும் சிறப்பு விருதினை வழங்கிக் கௌரவிக்கவுள்ளதாக ஆதீன கர்த்தா அறிவித்துள்ளார்.

(ஸ்ரீ-4)

# தனியார் வகுப்புக்களின் மூலம் மாணவர்களுக்கு ஏற்படும் பாதிப்பு

## ஆராய குழு நியமிக்குமாறு பரிந்துரை

(கொழும்பு)

தனியார் வகுப்புக்களின் மூலம் மாணவர்களுக்கு ஏற்படும் பாதிப்பு குறித்து ஆராய்வதற்கு கல்வி அமைச்சின் தலைமையில் தேசிய குழுவொன்று நியமிக்கப்படவேண்டும் என தேசிய கல்வி ஆணைக் குழு பரிந்துரை செய்துள்ளது.

தேசிய கல்வி ஆணைக்குழு 15 மாவட்டங்களில் முன்னெடுத்த ஆய்வுகளை அடுத்தே இந்தப் பரிந்துரை முன் வைக்கப்பட்டுள்ளது.

இந்த தேசிய குழுவில் மாகாண கல்வி அலுவலகம், தேசிய கல்வி நிறுவனம், சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை என்பன உள்ளடக்கப்படவேண்டும் எனவும் தேசிய கல்வி ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

10ஆம் ஆண்டு மாணவர்களில் 91.84 வீதமானவர்களும் 12ஆம் ஆண்டு மாணவர்களில் 98 வீதமானவர்களும் உயர் தரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களில் 100 வீதமானவர்களும் மேலதிக வகுப்புகளுக்குச் செல்வதாக தேசிய கல்வி ஆணைக்குழுவின் ஆய்வு மூலம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

10ஆம் ஆண்டில் கற்கும் மாணவர்களிடையே பாடசாலை பற்றிய நம்பிக்கை இல்லாமை, ஆசிரியர் பற்றாக்குறை, ஆசிரியர்கள் அடிக்கடி விடுமுறை பெறுவது, பாடத் திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாமை என்பனவே மாணவர்கள் மேலதிக வகுப்புகளுக்கு செல்வதற்கு பிரதான காரணமாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. போட்டி நிறைந்த உயர்தர வகுப்புகளுக்கு முகம் கொடுப்பதற்கு மேலதிக வகுப்புக்களின் ஊடாக வெற்றிகரமாக தயார்ப் படுத்துவதோடு சிறப்பாக கற்பிப்பது சாதகமான விடயமாகவுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

10ஆயிரம் ரூபா முதல் 20 ஆயிரம் ரூபா வருமானம் பெறும் குடும்பங்கள் மேலதிக வகுப்புகளுக்குச் செல்லும் மாணவர்களுக்காகவே கூடுதலாக செலவிடுகின்றனர்.

5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை, உயர் தரபரீட்சை வகுப்புக்களுக்காகவும் அதிகம் செலவிடப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

பாடத்திட்டத்தில் விடயதானம் அதிகமாக வுள்ளதால் மேலதிக வகுப்புகளுக்கு செல்வது கட்டாயம் எனவும் மேலதிக வகுப்பு மூலம் பிரதான பரீட்சைகளில் கூடுதலான மாணவர் கள் சித்தியடைவதாகவும் மேலதிக வகுப்புக ளின் மூலம் அழுத்தம் வழங்கப்படுகின்றது என தெரியவந்துள்ளது.

இந்த ஆய்வின் அடிப்படையில் பாடசாலை மாணவர்கள் தனியார் வகுப்புகளுக்குச் செல்வது தொடர்பில் மாற்றுக் கொள்கைத் திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்துவது தொடர்பில் நேற்று பரீட்சைத்திணைக்களத்தில் மாநாடு ஒன்று நடத்தப்பட்டது.

(ஸ்ரீ-4)

# இலங்கையில் அணுவாலைகளை அமைக்க இந்தியா ,ரஷ்யா உதவி

(கொழும்பு)

இலங்கையில் அணுவாலைகளை அமைப்பதற்கு இந்தியா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகள் ஒத்துழைப்பு வழங்கத் தீர்மானித்துள்ளன.

இலங்கை மற்றும் பங்களாதேஷ் போன்ற தெற்காசிய நாடுகளில் சிறியளவிலான அணுவாலைகளை நிறுவுவதற்கு இந்தியாவும் ரஷ்யாவும் கூட்டாக இணைந்து உதவிகளை வழங்கவுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சீன ஆதிக்கத்தை கட்டுப்படுத்தும் நோக்கில் இலங்கையில் அணுவாலைகளை அமைப்பதற்கு இந்தியாவும் ரஷ்யாவும் முனைப்புக் காட்டி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

ரஷ்ய பிரதமர் டிமிட்ரி மெட்வடேவ் அண்மையில் இந்தியாவிற்கு மேற்கொண்ட விஜயத்தின் போது இந்தத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

தெற்காசிய நாடுகளில் உட்கட்டுமான வசதிகளை ஏற்படுத்துவதில் சீனா கூடுதல் ஆதிக்கம் செலுத்தி வருவதாகவும் இதனை முறியடிக்கும் நோக்கில் இந்தியாவும் ரஷ்யாவும் அணுவாலைகளை நிறுவுவதற்கு ஒத்துழைப்பு வழங்கத் தீர்மானித்துள்ளன.

இலங்கை, பங்களாதேஷ் போன்ற நாடுகளில் அமைதியான முறையில் அணுசக்தியை பயன்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்கப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

அணுவாலைகளை அமைப்பதன் மூலம் இலங்கை மற்றும் பங்களாதேஷ் போன்ற நாடுகளில் பொருளாதார ரீதியான அபிவிருத்தியை ஏற்படுத்த முடியும் என இந்திய ஊடகங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

(ஸ்ரீ-2)

## க.பொ.த. உயர்தர பரீட்சை முடிவுகள்

யாழ்.கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம்

கலைப்பிரிவு

சி.கபில்டா -2 பிசி,த.சரளா-ஏபிசி,ற.தர்சிகா-ஏபிசி,ச.விஜித்தா-ஏசிஎஸ், அ.ஆரணியா-2சிஎஸ்,இ.துஷ்யந்தி-பி2சி.

(ஸ்ரீ-3)



கலாபூஷணம் சு.துரைசிங்கம் எழுதிய ஐந்து சிறுவர் நூல்கள் அறிமுகவிழா வவுனியா இந்து இளைஞர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் வவுனியா புகையிரத நிலைய அதிபர் மங்கல விளக்கேற்றுவதையும் அருகில் ஆலய குருக்கள் மற்றும் பிரமுகர்கள் நிற்பதையும் தமிழ்மணி அகளங்கன் நயப்புரை ஆற்றுவதையும் விழாவின் தலைவரும் வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் இ.ரவீந்திரன், டாக்டர் செ.ப.சத்தியநாதனுக்கு சிறப்புப்பிரதி வழங்குவதையும் நூலாசிரியர் மத்தியில் நிற்பதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஈராக்கில் இடம்பெற்ற தற்கொலை குண்டுத்தாக்குதலில் 17 பேர் பலி

(பக்தாத்)

ஈராக்கில் தற்கொலைப் படை தீவிரவாதிகள் பொலிஸ் நிலையம் அருகே நேற்று முன்தினம் நடத்திய தாக்குதலில் 17 பேர் பலியாகினர். 50 பேர் படுகாயம் அடைந்தனர்.

ஈராக்கின் மேற்கு நகரான ரமதியில் பொலிஸ் நிலையம் அருகேயுள்ள வீதியில் நேற்று முன்தினம் நின்று கொண்டிருந்த மினி பஸ் திடீரென பயங்கர சத்தத்துடன் வெடித்துச் சிதறியது.

இதில் பொலிஸ் நிலைய சுவர் இடிந்து அதன் அருகே நின்றிருந்தவர்கள் மீது விழுந்தது. அடுத்த சில விநாடிகளில் தற்கொலைப் படை தீவிரவாதி ஒருவன் பொலிஸ் நிலையத்துக்குள் நுழைந்தபடி உடலில் கட்டியிருந்த குண்டுகளை வெடிக்கச் செய்தான்.

பொலிஸ் நிலையத்தில் இருந்தவர்கள், பஸ்சில் இருந்தவர்கள் என 17 பேர் உடல் சிதறி பலியாகினர். மினிபஸ்ஸிலும் தற்கொலைப்படை தீவிரவாதிதான் ஏறி வெடிக்கச் செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.



இரு தீவிரவாதிகளும் உடல் சிதறி பலியாகினர். பலியானவர்களில் பெரும்பாலோர் பொலிஸ் அதிகாரிகள் என அந்தப் பகுதியின் ஆளுநர் காசிம் முகமது தெரிவித்தார்.

கடந்த 12 ஆம் திகதி தற்கொலை படை தீவிரவாதி காருடன் வெடித்து சிதறியதில் 13 பேர் கொல்லப்பட்டனர்.

அதன்பின் நேற்று முன்தினம் அடுத்தடுத்து இரண்டு மனித வெடிகுண்டுத் தாக்குதல்கலை ஈராக்கில் தீவிரவாதிகள் நடத்தியுள்ளனர். (ஸ்ரீ-2)

# நைஜீரியாவில் இடம்பெற்ற கலவரத்தில் 38 பேர் பலி

நைஜீரியாவில் கிறிஸ்தவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் அடிக்கடி மோதல் நடக்கும். கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த மக்கள் குடியரசுக் கட்சி நாட்டில் தற்போது ஆட்சியில் உள்ளது.

சமீபத்தில் கிறிஸ்மஸ் தினத்தன்று பிளாட்டஸ் மாகாணத் தலைநகர் ஜாஸ் நகரில் கலவரம் வெடித்தது.

நகரைச் சுற்றியுள்ள கிராமங்களில் நான்கு இடங்களில் தொடர் குண்டு வெடிப்பு நிகழ்ந்தது. இதில் 38 பேர் பலியாகினர். இதற்கிடையில் ஐ.நா. பொதுச் செயலர் பான்-கீ -மூன் விடுத்துள்ள அறிக்கையில் பண்டிகையைக் கொண்டாடும் நேரத்தில் இதுபோன்ற வன்முறைகள் நிகழ்ந்தது கண்டனத்துக்குரியது. வன்முறையாளர்களும் அவர்களுக்குத் துணை போன அரசு அதிகாரிகளும் நீதியின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்று கூறியுள்ளார். (2)




# லண்டனில் குண்டுத் தாக்குதல் மேற்கொள்ள முயற்சித்தோர் கைது

லண்டனில் குண்டுத் தாக்குதல் மேற்கொள்ள முயற்சித்த நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நத்தார் பண்டிகைக்கு முன்னதாக லண்டனின் முக்கிய நிலைகள் மீது குறித்த நபர்கள் தாக்குதல் நடத்த முயற்சித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு தாக்குதல் மேற்கொள்ள முற்பட்ட ஒன்பது பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர். லண்டன் பங்குச்சந்தை மீதும் தாக்குதல் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

19 வயது தொடக்கம் 28 வயது வரையிலான நபர்கள் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கார்டிப், லண்டன், ஸ்டொக் ஒன் ட்ரெண்ட் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த இளைஞர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

அமெரிக்கத் தூதரகம், மதத்தளங்கள் உள்ளிட்ட பல்வேறு முக்கிய நிலைகள் மீது தாக்குதல் நடத்தத் திட்டமிடப்பட்டு வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 2006 ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வரும் அனைவரும் இஸ்லாமியர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கைது செய்யப்பட்டவர்களை தடுப்புக் காவலில் வைத்து விசாரிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# வடகொரியாவுக்கு பதிலடி கொடுக்க ஒன்றிணையுங்கள்

## தென்கொரிய ஜனாதிபதி அழைப்பு




வடகொரியாவுக்குப் பதிலடி கொடுப்பதற்கு ஒன்று திரளுங்கள் என்று தென்கொரிய ஜனாதிபதி லீமியுங் பாக் அந்நாட்டு மக்களுக்கு அறைகூவல் விடுத்துள்ளார்.

தென்கொரிய தேசிய வானொலியில் நேற்று முன்தினம் உரையாற்றிய அவர், வடகொரியா இனிமேல் ஏதாவது ஒரு தாக்குதல் நடத்தினாலும், அதன் மீது இரக்கம் காட்டாமல் கடுமையாகத் தாக்குவோம். நமது நாட்டின் பாதுகாப்பு தற்போது ஒரு ஆபத்தான நிலையில் இருக்கிறது. இந்த நேரத்தில், நமக்குள் வேறுபாடுகள் எழுவதை நாம் அனுமதிக்க முடியாது. நமது போர்க்கப்பல் ,வடகொரிய நீர்மூழ்கிக் கப்பலால் தாக்கப்பட்டு அதில் இருந்தவர்களில் 46 பேர் உயிரிழந்த சம்பவம், நம்மில் பல்வேறு கருத்து வேறுபாடுகளை உண்டாக்கியது.

அந்தக் கருத்து வேறுபாடு தான், இயான்பியாங் தீவு மீது வடகொரியா தாக்குதல் நடத்த வழிகாட்டி விட்டது.அதனால், நாம் ஒன்றுதிரண்டு நமது ஒற்றுமையைக் காட்டினால், வடகொரியா நம்மை எதிர்க்க அஞ்சும். நடந்த தாக்குதலுக்குச் சரியான பதிலடி கொடுக்க வேண்டும் என்பதை நாம் உணர்ந்துள்ளோம்.

அதுதான் போரைத் தடுக்கும், அமைதியை நிலைநிறுத்தும்.வடகொரியா உடனான அமைதியான இணக்கத்தையே இப்போதும் தென்கொரியா விரும்புகிறது. இவ்வாறு லீ மியுங் பாக் தெரிவித்துள்ளார். சமீபத்தில்தான், தென்கொரியப் பாதுகாப்பு அமைச்சர் கிம் க்வான் ஜின்னும் சீனப்பாதுகாப்பு அமைச்சர் லியாங் குவாங்லீயும் அடுத்தாண்டு பெப்ரவரி மாதம், சீனத்தலைவர் தலைநகர் பீஜிங்கில் சந்தித்து, இந்தப் பிரச்சினை குறித்து பேசுவர் என்ற செய்தி வெளியானது. (ஸ்ரீ-2)



அமெரிக்கா , நியூயோர்க்கில் பெய்துவரும் கடும் பனிப் பொழிவால் வீதிகளில் ஒரு அடி உயரத்துக்கு மேல் பனி ,குவிந்துள்ளது. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.


# சவப்பெட்டியில் வைத்து மூடப்பட்ட மூதாட்டி உயிர் தப்பினார்

(சாபோலோ)

பிரேசில் நாட்டில் இறந்ததாக அறிவிக்கப்பட்டு சவப்பெட்டியில் வைத்து மூடப்பட்ட மூதாட்டி உயிர் பிழைத்தார். ஆனால் அவர் 2 நாட்கள் கழித்து இறந்தார்.

மினாஸ் ஜெரியாஸ் என்ற இடத்தை சேர்ந்தவர் மரியாதாஸ் டோர்ஸ் (வயது 88). உடல் நலக்குறைவால் மருத்துவமனையில் இருந்த அவர் கடந்த 22 ஆம் திகதி இறந்ததாக டாக்டர் அறிவித்தார்.

அவரது உடலை சவப்பெட்டியில் வைத்து வீட்டுக்கு எடுத்து சென்றனர். புதைப்பதற்கான ஏற்பாடுகள் நடந்தன.



அப்போது சவப் பெட்டி அசைந்தது. திறந்து பார்த்த போது மரியா உயிருடன் இருந்தார். பின்னர் அவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு வெள்ளிக்கிழமை இறந்தார். (2)

# கணவன் முன் அமர்ந்து சாப்பிட 60 வீத பெண்கள் விரும்புவதில்லை

## ஆய்வில் தகவல்

(லண்டன்)

அசௌகரியமாக எண்ணுவதால் கணவன் முன் அமர்ந்து சாப்பிடுவதை 60 சத வீதம் பெண்கள் விரும்புவது இல்லை என்று ஆய்வில் தெரியவந்துள்ளது.

ஆண் மற்றும் பெண்களுக்கு இடையேயான தாம்பத்திய உறவு பற்றிய மனநிலை, உணவுப் பழக்கவழக்க நடைமுறைகள் குறித்து இங்கிலாந்தில் ஓர் ஆய்வு நடத்தப்பட்டது. அதில் 5 ஆயிரம் பேர் கலந்து கொண்டு தங்கள் கருத்துக்களைப் பதிவு செய்தனர். அதன் விபரம் வருமாறு,

கணவன் முன் அமர்ந்து சாப்பிடும் போது ஒருவிதமான அசௌகரியம் ஏற்படுகிறது. எனவே அவ்வாறு சாப்பிடுவதை விரும்பவில்லை என்று 60 சதவீதமானோர் தெரிவித்தனர். பெண்கள் தங்கள் உடல் எடையைக் கட்டுக்கோப்பாக வைத்திருக்க உணவுமுறை குறித்து எப்போதும் சிந்திக்கின்றனர்.

உணவு எடுத்துக் கொள்ளும் முறை பற்றி 25 சதவீதம் பெண்கள் ஒவ்வொரு அரை மணி நேரமும் 10 இல் ஒரு பெண் தாம்பத்திய உறவு குறித்து அடிக்கடி சிந்திப்பதும் தெரிய வந்தது.

மேலும் 13 சதவீத பெண்கள் உணவுப் பட்டியல் மற்றும் குறைந்த அளவு கொண்ட கலோரி உணவுகளை அறிய முற்படுகின்றனர்.15 சதவீதம் பேர் பழைய பண்டங்களைச் சாப்பிடுகின்றனர். (ஸ்ரீ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நரி தன் கனவில் கூட கோழிகளை எண்ணிக் கொண்டேயிருக்கும்.

– வாலஸ்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# அண்டாவில் விடப்பட்ட ஆமைகளாய் நாங்கள்... ஐயா! அந்தப் பேராமைகள் எங்கே?

இலங்கையில் ஆமையைப் பிடிப்பதற்குத் தடை. முன்பு இந்தத் தடை இருந்ததோ! என்னவோ! தெரியாது. ஆனால், ஆமையைப் பிடிப்பவர்கள் அதனைக் கொல்வதற்குப் பெரும் சிரமப்படுவர்.

ஆமை தன் உறுப்புக்களை உள்ளிழுத்து பாதுகாப்புத் தேடிக் கொள்வதாலேயே அதனைக் கொல்வதில் பெரும் சிரமம்.

இதற்காக ஆமையைப் பிடிப்பவர்கள் பெரிய அண்டாக்களில் தண்ணீர் ஊற்றி அதற்குள் ஆமையை விட்டு அண்டாவை அடுப்பில் வைத்து அனல் எரிப்பர்.

அண்டாவிலுள்ள தண்ணீரில் விடப்பட்ட ஆமை ஆனந்தமாக ஓடித் திரியும். அடுப்பில் எரிகின்ற நெருப்பு தண்ணீரைச் சூடாக்க அவ்வெந்நீரில் வெந்து தனது உயிர் பிரியப் போகும் செய்தியை அந்த ஆமை அறியாதிருக்கும்.

இதோ! விறகு நெருப்பாகிறது. அண்டாவில் இருக்கும் தண்ணீர் மெல்ல மெல்லச் சூடாகிறது. மெல்லிய சூட்டிலும் நிலைமையைப் புரியாத ஆமை அதனையும் தனக்கான இதம் என்று கருதுகிறது.

அந்தோ! அண்டாவில் உள்ள தண்ணீர் கொதிக்கிறது; ஆமை துடிக்கிறது; ஆவி பிரிகிறது.

இந்தக் கதை எதுக்கானது என்று நீங்கள் யாரேனும் கேட்கலாம். எல்லாம் எங்களுக்கானது தான்.

அண்டாவில் விடப்பட்ட ஆமைகளாக அப்பாவித் தமிழ் மக்கள் உள்ளனர். தென்பகுதியில் இருந்து வருகின்ற பொருட்கள், ஆட்கள், கையடக்கத் தொலைபேசிகள், விடுதி வாழ்க்கைகள், ஆடம்பரப் பொருட்கள் இவைதான் குளிர்ந்த நீர்.

இந்த நீர் கொதிநீராக மாறப் போவதை அறியாமல் இதுவே பெரும் கிடைப்பனவு எனக் கருதி ஆமைகள் போல நாங்கள் நீந்தி, மகிழ்ந்து விளையாடுகிறோம்.

அதோ! அண்டா இருக்கும் அடுப்பில் விறகை மூட்டப் போகிறார்கள். விறகு மூட்டுபவர்கள் ஆமைகளைப் பார்த்துச் சொல்கிறார்கள், "ஆமைகளே! இப்படிக் குளிர்ந்த நீர் உங்களுக்கு எப்போதாவது கிடைத்திருக்கிறதா என்ன சொல்லுங்கள்?". இப்படிக் கேட்டபடியே நெருப்பு எரிக்கப்படுகிறது. தண்ணீர் கொதிக்கப் போகிறது. எங்கே ஆமைகளின் பிரதிநிதிகளான ஆமைகள்?

ஓ! அவைகள் பேராமைகள். அவர்களிடம் பொறாமைகளும், இயலாமைகளும், அறியாமைகளும் தாராளம்.

இந்த ஆமைகள் தேர்தல் காலங்களில் மட்டும் தான் இங்கு வருமாம். அப்படியானால் அந்த ஆமைகள் எப்படித் தப்பிக் கொள்கின்றன? அட! அந்தப் பேராமைகள் முயலை விட ஓடத் தெரிந்தவை; உழைக்கத் தெரிந்தவை; கதைக்கவும் தெரிந்தவை. அந்த ஆமைகள் நிலத்திலும் வாழும் நீரிலும் வாழும். அண்டாக்களில் இருக்கும் ஆமைகள்தான் பாவங்கள்.

இருந்தும் தண்ணீர் கொதிப்பதற்குள் உள்ளூராட்சித் தேர்தல்களும் மாகாண சபைத் தேர்தல்களும் சேர்ந்து 2011 இன் ஆரம்பத்தில் வீசும் போல் தெரிகிறது. அப்படியென்றால் எங்க – அந்தப் பெருத்த ஆமைகள். கட்டாயம் இந்த ஊருக்கு வரத்தான் செய்யும். வரட்டும் ஒரு கை பாப்பம்.

# குடாநாட்டில் தொடரும் கொலை, கொள்ளைச் சம்பவங்களை ஜனாதிபதி தலையிட்டு தடுத்து நிறுத்த வேண்டியது அவசியம்

## திருமதி விஜயகலா மகேஸ்வரன் எம்.பி. கோரிக்கை

குடாநாட்டில் கொலைகள், கொள்ளைச் சம்பவங்கள் தொடர்ந்து வருகின்றமை பொதுமக்கள் மத்தியில் பெரும் அச்சத்தையும் பீதியையும் ஏற்படுத்தியுள்ளது.

அண்மைக்காலமாக குடாநாட்டில் பலர் கொல்லப்பட்டுள்ளதுடன் கொள்ளைச் சம்பவங்களும் அதிகரித்து வருகின்றன. இத்தகைய செயற்பாடுகளை தடுத்து நிறுத்துவதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கையினை எடுக்க வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ் வரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நேற்று முன்தினம் இரவு வலிகாமம் வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் மார்க்கண்டு சிவலிங்கம் ஆயுததாரிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

மகளுடன் அவர் வீட்டிலிருந்த சமயம் இங்கு வந்த ஆயுததாரிகள் அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டு தப்பிச் சென்றுள்ளனர். இத்தகைய செயற்பாடு யாழ். குடாநாட்டு மக்கள் மத்தியிலும் கல்விச் சமூகத்தினர் இடையேயும் பெரும் அச்ச உணர்வை ஏற்படுத்தியிருக்கின்றது.

இதேபோல் யாழ்ப்பாணம், சங்கானை, இலுப்பைத்தாழ்வு, முருகமூர்த்தி ஆலயப் பிரதம குருக்களின் வீட்டுக்குள் கடந்த 11 ஆம் திகதி இரவு உட்புகுந்த ஆயுததாரிகள் அவர் மீதும் அவரது இரு மகன்மார் மீதும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதுடன் நகைகளையும் கொள்ளையடித்துச் சென்றிருந்தனர்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான குருக்கள் சிகிச்சை பலனின்றி கடந்த 15 ஆம் திகதி உயிரிழந்தார். இதேபோல் சுன்னாகம், மானிப்பாய், ஆனைக்கோட்டை, வடமராட்சி உட்பட பல பகுதிகளிலும் கொள்ளைச் சம்பவங்களும் கொலைச் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

யுத்தம் முடிபடைந்து ஒன்றரை வருடங்கள் நிறைவடைந்த பின்னரும் இத்தகைய சம்பவங்கள் இடம்பெறுவதானது அரசாங்கத்துக்கே அபகீர்த்தியை ஏற்படுத்தும். குடாநாட்டில் தொடரும் கொலை, கொள்ளைச் சம்பவங்களி னால் அங்கு செல்வதற்குக் கூட மக்கள் அஞ்சும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே இத்தகைய குற்றச்செயல்களை தடுப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.



கடந்த காலத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் உரிய விசாரணை நடத்தப்பட்டு குற்றவாளிகள் உடனடியாக தண்டிக்கப்பட வேண்டும்.

குடாநாட்டில் படையினரும் பொலிஸாரும் பெருமளவில் கடமையில் ஈடுபட்டிருக்கின்ற நிலையில் இத்தகைய சம்பவங்கள் தொடர்வதானது அரசாங்கத்துக்கே அபகீர்த்தியை ஏற்படுத்துவதாக உள்ளது.

எனவே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இவ்விடயத்தில் தலையிட்டு இனிமேலும் இத்தகைய சம்பவங்கள் இடம்பெறுவதைத் தடுத்து நிறுத்த வேண்டும். (ஸ்ரீ)

# புனர்வாழ்வு பெற்ற முன்னாள் புலி உறுப்பினர்கள் வாழ்வாதார, தொழில் வசதிகளின்றி சிரமம்

புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகத்துடன் இணைக்கப்பட்டுள்ள முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்கள் இயல்பு வாழ்க்கையை அமைத்துக் கொள்ளக் கூடிய அளவிற்கு எவ்வித வாழ்வாதார தொழில் வசதிகளுமின்றி சிரமப்படுவதாகக் கூறுகின்றனர்.

இறுதிக்கட்ட யுத்தத்தின் பின்னர் இராணுவத்தினரிடம் சரணடைந்த முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்களுக்கு புனர்வாழ்வு நிலையங்களை ஏற்படுத்தி அவற்றில் தொழில் பயிற்சி உட்பட பல்வேறு புனர்வாழ்வுப் பயிற்சிகளை வழங்கி வருவதாக அரசாங்க அதிகாரிகள் தெரிவித்திருந்தனர்.

அத்தோடு இவ்வாறு பயிற்சி பெற்ற இளைஞர் யுவதிகள் கட்டம் கட்டமாக விடுதலை செய்யப்பட்டு சமூகத்தில் இணைக்கப்பட்டு வருவதாகவும் அவர்களது வாழ்வாதாரத்திற்கான உதவிகளுக்கென பல்வேறு திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருவதாகவும் அரசாங்கம் கூறுகின்றது.

ஆயினும் தொழில் பயிற்சி பெற்றிருக்கின்ற போதிலும் தமது வாழ்வாதரத்திற்கான தொழில் வாய்ப்புக்களைப் பெற முடியாத நிலையிலேயே தாங்கள் இருப்பதாகப் புனர்வாழ்வு நிலையங்களில் இருந்து விடுதலை பெற்று சமூகத்தில் இணைக்கப்பட்டுள்ளவர்கள் கூறுகின்றார்கள்.

புனர்வாழ்வு நிலையங்கள் என்ற தடுப்பில் இருந்து விடுதலை பெற்று வந்தவர்கள் முன்னர் விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்திருந்தவர்கள் என்ற காரணங்களினால் சமூகத்தில் தங்களுக்கு இயல்பான வரவேற்பு கிடைப்பதில்லை என்றும் சந்தேகத்துடன் கூடிய ஓர் அணுகு முறையையே சமூகம் வெளிப்படுத்துகின்றது என்றும் அவர்கள் கவலை தெரிவித்திருக்கின்றார்கள்.

பல நாட்களாகப் பிரிந்திருந்து இப்போது குடும்பங்களுடன் இணைந்ததன் பின்னர் தமக்குரிய தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்கும் தமது வாழ்க்கையை ஆரம்பிப்பதற்கும் குடும்பங்களுக்கு உதவுவதற்கும் தேவையான தொழில் வாய்ப்பைப் பெற முடியாதிருப்பது பெரும் வேதனையளிப்பதாகவே இருக்கின்றது என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-4)

# 120 அலகுகள் வரை குறைந்த கட்டணம்

(கொழும்பு)

மின்சாரப் பாவனையாளர்களுக்கான ஆரம்ப விலை முறைமையை முதல் 120 அலகு வரை அதிகரிக்குமாறு இலங்கை மின்சார சபைக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பணிப்புரை விடுத்துள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்தது.

வரவு செலவுத் திட்ட உரையில் ஜனாதிபதி பின்வருமாறு தெரிவித்திருந்தார். மின் தடையினை ஏற்கெனவே தடுத்துள்ளோம். அத்துடன் அனைவருக்கும் மின்சாரம் கிடைக்கக் கூடிய வகையில் ஏற்பாடு செய்துள்ளோம்.

இதனடிப்படையில் மின்சார அலகுக்கான கட்டணம் குறைக்கப்பட்டுள்ளதாக தகவல் திணைக்களம் தெரிவித்தது. (ஸ)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்



மாமேதை வியாச முனிவரால் இயற்றப்பெற்ற மகாபாரதத்தைப் பார்ப்போமானால் சீரும் சிறப்பு மிக்க எண்ணத்தொலையா மாபெரும் பாரத வீரர்கள் அடங்கிய பட்டியலைத் தருவது இயலாத செயல் என்பேன். குருட்டு மன்னன் திருதராஷ்டிரன் – கடவுள் பக்தி மிக்கவனாயினும் மனவுறுதியில்லாதவன், வயது முதிர்ந்தவன் – இவன் உள்ளத்தில் அறத்திற்கும் பாசத்திற்கும் இடையே நடைபெற்ற போராட்டங்கள், பெரும்புகழ் பெற்ற பீஷ்மர், அறச்சிந்தை கொண்ட யுதிஷ்டிர மன்னன், தோள்வலியும் சகோதர பக்தியும் ராஜபக்தியும் கொண்ட அவனது தம்பிமார்கள் நால்வர், அறிவிலும் கல்வித் தேர்ச்சியிலும் தன்னிகரற்று விளங்கும் ஸ்ரீகிருஷ்ணர் இவர்களுக்கு அறிவில் ஒரு சிறிதும் குறையாத பெண்டிர்கள் – ராஜகம்பீரம் வாய்ந்த அரசமாதேவி காந்தாரி, அன்பே உருவான அன்னை குந்திதேவி, பதிபக்தியில் அணுவளவும் குறையாத, துன்பமே உருக்கொண்டாற் போன்ற திரௌபதி – இவர்களும் இவர்களைப் போன்ற நூற்றுக்கணக்கான மக்களும் இராமாயணத்தில் இடம்பெற்ற மக்களும் பாரத நாட்டினரால் காலம்காலமாகப் போற்றிப் பாதுகாக்கப்பட்டு வந்த பரம்பரைச் சொத்து எனலாம். இதை அடிப்படையாக வைத்தே இந்திய மக்களின் சிந்தனைகளும், நீதிகளும் அறங்களும் உருவாகியுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மின்சார சலுகை அதிகரிப்பு

மின்சார கட்டணத்திற்காக வழங்கப்பட்டு வந்த சலுகை முறைமையை சீரமைப்பது தொடர்பில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வினால் மின்சார சபைக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதன்படி இதுவரையில் முதல் 90 அலகுகளுக்கு வழங்கப்பட்டு வந்த சலுகை கட்டண முறைமையை முதல் 120 அலகுகளுக்கும் நீடித்து வழங்குமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார். (ஸ்ரீ-2)

## பல்கலைக்கழக அனுமதி கிடைக்காத மாணவர்களுக்கு உயர்கல்வி வாய்ப்பு

(கொழும்பு)

க.பொ.த. உயர்தரப்பரீட்சையில் பல்கலைக்கழக அனுமதிக்கு தகைமைபெற்றும் பல்கலைக்கழக நுழைவுக்கான வாய்ப்புக் கிடைக்காத மாணவர்களுக்கு உயர்கல்விக்கான சந்தர்ப்பத்தை வழங்கும் பொருட்டு விசேட செயற்றிட்டம் ஒன்றுஅடுத்த வருடம் ஆரம்பிக்கப்படும் என கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

கல்வி அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற டயலொக் புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

கடந்த ஒகஸ்ட் மாதம் நடைபெற்ற க.பொ.த. உயர்தரப்பரீட்சைக்கு 2இலட்சத்து 32ஆயிரம் மாணவர்கள் தோற்றியிருந்தனர். இவர்களில் ஒரு இலட்சத்து 40 ஆயிரம் மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்குத் தகைமை பெற்றுள்ளனர். இருப்பினும் தகைமை பெற்றுள்ள அனைத்து மாணவர்களுக்கும் பல்கலைக்கழகம் செல்வதற்கான வாய்ப்பு வழங்கப்படுவதில்லை.

பல்கலைக்கழகங்களில் காணப்படும் மனித வளம் மற்றும் பௌதீகவள பற்றாக் குறையே இதற்குக் காரணமாகும். இவற்றைக் கருத்தில் கொண்டு கல்வி அமைச்சு ஏனைய இரு அமைச்சுகளான இளைஞர் விவகார அமைச்சு, விளையாட்டுத்துறை அமைச்சு என்பவற்றுடன் இணைந்து விசேட செயற்றிட்டம் ஒன்றை ஆரம்பிக்கவுள்ளது.

இச் செயற்றிட்டத்தின் மூலம் பல்கலைக்கழக அனுமதி கிடைக்காத மாணவர்களுக்கு உயர் கல்விக்கான வாய்ப்புக்கிடைக்கும்.

நகரப்புறப் பாடசாலை மாணவர்கள் தான் சிறந்த பெறுபேறுகளைப்பெறுவது என்ற சரித்திரம் மாற்றப்பட்டு கஷ்டப்பிரதேச மாணவர்களும் சிறந்த பரீட்சை பெறுபேறுகளைப் பெறுகின்ற புதிய கலாசாரம் உருவாக்கப் பட்டுள்ளது.

இதற்கு ஓர் உதாரணமாக அண்மையில் வெளியிடப்பட்ட க.பொ.த. உயர்தரப்பரீட்சை முடிவுகளின் படி கணிதத்துறை தவிர்ந்த ஏனைய 3 உயர் தரத் துறையிலும் கஷ்டப் பிரதேச மாணவர்களே சிறப்புப் பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர்.

மாணவர்களின் எதிர்கால விருத்திக்கு கல்வித்துறையில் பல்வேறு பங்களிப்புக்களை டயலொக் நிறுவனம் வழங்கி வருகின்றது என்றார். (ஸ்ரீ-2)

## சுங்கப் பிரிவினரால் இருவர் கைது

(கொழும்பு)

டயர் இறக்குமதியின் போது சுங்கத் திணைக்களத்திற்கு தவறான தகவல்களை வழங்கி அரசாங்கத்திற்கு 50 மில்லியன் ரூபா இழப்பை ஏற்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் இருவர் சுங்கப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி நிறுவனத்தின் வற் கணக்கு விபரங்களில் முறைகேடுகள் இருப்பதை கண்டுபிடித்த பின் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டதாக பிரதி சுங்கப் பணிப்பாளர் அதுல லாங்காதேவ தெரிவித்துள்ளார்.

சுங்கத் திணைக்கள தலைமை அலுவலகத்திற்கு அருகிலுள்ள மேற்படி நிறுவனத்தை நாம் முற்றுகையிட்டோம். இச்சந்தேக நபர் கடந்த 2-3 வருடங்களாக இம் மோசடியில் ஈடுபட்டுள்ளார்.

அவரின் உதவியாளர் ஒருவரும் பின்னர் கைது செய்யப்பட்டார் என அதுல லங்கா தேவ தெரிவித்தார்.

சுங்க அதிகாரிகள் இது குறித்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளதுடன் மோசடி செய்யப்பட்டதொகை அதிகமாக இருக்கலாம் எனவும் ஊகம் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-2)

## இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பாதுகாப்பு உறவுகள் வலுப்படுத்தப்படவுள்ளன

(கொழும்பு)

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பாதுகாப்பு உறவுகள் மேலும் வலுப் படுத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு கூட்டுறவு நடவடிக்கைகளின் ஓர் கட்டமாக அடுத்த ஆண்டில் இரு நாடுகளினதும் கடற்படையினர் கூட்டுப்பயிற்சிகளை நடத்தவுள்ளனர்.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள இந்திய பாதுகாப்புச் செயலாளர் பிரதீப் குமாருக்கும் பாதுகாப்புச்செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பின் போது கூட்டுக்கடற்படை பேச்சுவார்த்தை குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது.

கூட்டுப்படைகளின் கட்டளைத் தளபதி, இராணுவத்தளபதி, கடற்படைத்தளபதி, வான் படைத் தளபதி உள்ளிட்டோரும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இரு நாடுகளும் பொதுவாக எதிர்நோக்கும் பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் மற்றும் சிக்கல்கள் குறித்து இந்தச் சந்திப்பில் கவனம் செலுத்தப்பட்டதாக குறிப்பிடப்படுகிறது.

பல்வேறு வழிகளில் இரு தரப்பு பாதுகாப்பு உறவுகளை வலுப்படுத்திக்கொள்வது குறித்து இந்த சந்திப்பில் கலந்துரையாடப் பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

## கடனட்டை மோசடியில் ஈடுபட்ட மூன்று தமிழ் இளைஞர்கள் கனடாவில் கைது

கடனட்டை மோசடியில் ஈடுபட்டிருந்த மூன்று தமிழ் இளைஞர்களை கனேடிய பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கனடாவின் ஹல்பா பிரதேசத்திலேயே குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. இளைஞர்கள் மூவரும் ஏனையவர்களின் கடனட்டை தகவல்களை திருட முயற்சித்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

கனடா றொரண்டோவில் வசிக்கும் சுகிர்தன் ஸ்ரீஸ்கந்தராஜா (வயது34), பரணீதரன் சடாச்சரம் (வயது-29) மற்றும் தயாபரன் தனநாயகம் (வயது32) ஆகியோரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளவர்களாவர்.

பிரஸ்தாப இளைஞர்கள் மூவரும் அப் பிரதேசத்தில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடியுள்ளதுடன் வங்கிகளின் தன்னியக்க பணப்பரிவர்த்தனை இயந்திரம் (ஏ.டி.எம்) மீது யாருக்கும் சந்தேகம் வராத வகையில் கடன் அட்டைத் தகவல்களைத் திருடும் கருவியைப் பொருத்தியுள்ளனர்.

அதன் பின் அவர்கள் வான் ஒன்றில் இருந்தவாறு கடன் அட்டைத் தகவல்களை திருடிக் கொண்டிருந்த நிலையில் பொலிஸாரிடம் கையும் மெய்யுமாகப் பிடிபட்டுள்ளனர்.

கடந்த 19ஆம் திகதி இச்சம்பவம் நடை பெற்றுள்ளது.

பொலிஸார் அவர்களைக் கைது செய்து காரைச் சோதனையிட்டபோது கடனட்டைகளின் தகவல்களைக் களவாடப் பயன்பட்ட கமரா ஒன்றும் கடனட்டை உராய்வு இயந்திரம் ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தற்போதைக்கு இது தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்படும் அதே வேளை பிரஸ்தாப இளைஞர்களுக்கும் பிணை வழங்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

## போத்தல் குத்துச் சம்பவத்தில் வியாபாரி படுகாயம்

(கரவெட்டி)

வடமராட்சியில் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்ட தென்னிலங்கை வியாபாரிகள் இருவருக்கு இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாகமாறி போத்தல் குத்துச் சம்பவத்தில் முடிவடைந்துள்ளது.

நெல்லியடி நகரப்பகுதியில் மேசை, கதிரை வியாபார நடவடிக்கையில் ஈடுபடும் இரு வியாபாரிகளே கடந்த 26 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை இரவு 7.30 மணிக்கு சண்டையில் ஈடுபட்ட வேளை ஒரு வியாபாரி உடைந்த போத் தலினால் மற்ற வியாபாரிக்கு தலையிலும் மார்பிலும் குத்தியுள்ளார்.

இச்சம்பவத்தில்கொழும்பு மொரட்டுவவைச் சேர்ந்த எம்.எஸ் பீரிஸ் (வயது 32) என்பவரே போத்தல் குத்துக்கு இலக்காகி சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஸ்ரீ-3-24)

## ரயில் தண்டவாள இரும்புகளை கடத்திய அறுவர் கைதாகினர்

(கொழும்பு)

புத்தளம் கருவலகஸ்வெல பகுதியினூடகப் பயணித்துக் கொண்டிருந்த லொறியொன்றிலிருந்து சட்டவிரோதமாகக் கடத்தப்பட்ட 12 ஆயிரம் கிலோகிராம் நிறையுடைய ரயில் தண்டவாள இரும்புகள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் சந்தேக நபர்கள் அறுவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வவுனியாவிலிருந்து வத்தளை பிரதேசத்தை நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த லொறியிலிருந்தே மேற்படி கடத்தல் இரும்புகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக கருவலகஸ்வெல பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தின் போது கைது செய்யப்பட்டவர்களில் ஐவர் புத்தளம் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் ஏனையவர் வவுனியாவைச் சேர்ந்தவரென்றும் பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கருவலகஸ்வெல பொலிஸார் மேற்கொண்டு வருவதுடன் சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

## இன்பசிட்டியில் மினிசூறாவளி

வடமராட்சி இன்பசிட்டி பகுதியில் நேற்றுக் காலை மழையுடன் கூடிய மினி சூறாவளி வீசியது.

இதனால் அப்பகுதியில் சில வீடுகளின் கூரைப்பகுதிகள் மற்றும் கட்டடங்களின் கூரைப் பகுதிகள் சிறு சேதங்களுக்கு இலக்கானதாக தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை வடமராட்சியில் பலத்த மழை பெய்து வருகிறது.

நேற்று அதிகாலை 4 மணிக்கு ஆரம்பமான மழை தொடர்ந்தும் மாலை வரை விடாது பெய்து வருகிறது. (ஸ்ரீ-3-10)


அதிவண. கலாநிதி

எஸ்.ஜெபநேசன் அடிகளாரின்



தொடரும் ஆன்மீக கல்விசார் பயணம்

(சுயசரிதை)

நூல் வெளியீட்டு விழா அழைப்பிதழ்

இடம்

கேட்போர் கூடம், நூல் நிலையம், யாழ்.பல்கலைக்கழகம். யாழ்ப்பாணம்

காலம்

31.12.2010 வெள்ளிக்கிழமை பி.ப 3.30 மணி

தலைவர்

வண. பிதா மரிய சேவியர்

இயக்குநர், கலைத்தூது அழகியற்கல்லூரி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரதி விலை ரூபா 500/= (சி-1988) விழாக்குழு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைவிடப்பட்ட 915 மோ.சைக்கிள்களின் உரிமையாளர்கள் இனங்காணப்பட்டனர்

## கிளிநொச்சி அரச அதிபர் அறிவிப்பு

**(கிளிநொச்சி)**
**மோட்டார் வாகனப் பகுதி பரிசோதகர்களால் பரிசோதிக்கப்பட்ட 2 ஆயிரம் மோட்டார் சைக்கிள்களில் 915 மோட்டார் சைக்கிள்களுக்கான உரிமையாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். எனவே இவ்வாகன உரிமையாளர்கள் 10.01.2011ம் திகதிக்கு முன்னதாக உரிய ஆவணங்களை ஒப்படைத்து தமது மோட்டார் சைக்கிள்களைப் பெற்றுக் கொள்ளுமாறு கிளிநொச்சி அரசாங்க அதிபர் திருமதி றூ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.**

JV-1802, 160-3821, 143-5060, MT-1020, JD-4985, 502-0890, 139-7889, GV-3997, HV-4679, MF-3357, JQ-5597, GO-6099, HQ-8379, MP-8946, JP-0111, JD-1693, TY-8468, JN-6301, TL-5002, GF-5096, HN-2901, JM-7472, GH-6050, 147-9030, 500-6738

142-6521, 128-8345, 135-0065, 109-3231, GW-9934, 139-0639, 146-8971, 500-9120, ME-8213, HX-1315, HZ-3305, 140-0859, HR-2384, MH-5324, 147-9511, 502-0748, JA-9470, MK-5607, MQ-3045, 104-8448, HJ-5667, 110-2805, 144-1463, GO-3568, 140-2596

JD-4745, 139-3043, HD-5575, GR-9159, 500-5433, 148-2114, GW-5679, UB-0196, GS-8927, GM-9747, 157-7053, 154-2837, 158-6418, RA-5869, HA-1445, JE-1781, NPMB-1414, HX-3346, MM-3982, 127-3687, 146-8335, 112-1221, 134-5894, GK-2628, GA-8742

149-4601, 133-8435, TL-4941, 500-6984, 158-0189, 153-0958, 148-2896, 157-4885, HR-9618, 147-7151, 502-0876, HX-4001, 159-6746, HQ-4021, 502-0505, 109-8794, 143-6674, 88-9702, 138-3276, GD-9256, 502-1071, HE-2126, 158-9031, HA-6395, JH-4296

GB-3992, 148-2768, HE-7358, 141-0744, 152-1448, 157-9936, GA-2411, 157-9027, MC-2932, 500-9633, MR-2459, HC-3589, 128-3497, HL-8762, 141-0577, 148-8489, 110-6459, 502-0074, 154-6439, 109-1125, GO-6073, 500-6576, JA-6274, HY-9641, HW-4309

MR-4787, JG-6513, JR-5248, 101-9282, GN-0261, 500-7842, 134-1547, 89-2679, JH-4456, JG-0262, JZ-6703, 133-9666, GH-0170, HX-3373, HD-7814, GW-5674, HJ-5128, HM-1006, GQ-9380, JF-1851, HI-2484, MG-6647, JF-2611, HS-8058, HJ-1378

JF-8179, HX-2501, JA-9236, 140-6671, MN-7425, MS-6210, HB-7300, JZ-6776, HE-3935, HQ-2646, JV-6964, HX-0123, JV-6494, LC-5601, HZ-6339, GF-4272, MA-6523, MD-3205, HU-0768, HY-7698, HW-3951, JY-5673, MG-9582, MH-5331, HO-0489

MP-1286, GV-4438, JV-6446, GK-1637, JP-8728, MF-9995, HI-9051, JC-3725, MD-7982, GG-3315, MF-4693, JD-7122, GO-6072, JB-0035, HG-0588, 149-0003, 151-1368, MQ-6689, MG-6828, MH-0262, JD-4160, TS-7963, JZ-5700, MM-3840, GO-7309

JC-7824, JQ-1092, HZ-2888, HD-6491, MB-4386, GW-5621, JS-4094, 500-4008, MK-4325, TL-4721, 151-9269, MB-0528, 502-0321, GN-9777, 500-6001, 500-0212, GN-9732, MC-4267, HE-9668, NPGQ-7463, JG-2952, HS-9950, ME-9993, HY-4965, GW-5560

NPGQ-9405, 118-2831, MC-7568, HH-1832, 148-0461, MF-1819, MJ-3627, JB-4070, HK-9904, MT-9937, HM-1412, MI-8696, HE-7269, MA-2797, JJ-0560, JG-7054, HA-5961, MN-1611, HP-6234, 152-4659, 94-7653, TL-4894, ME-3598, 140-3977, MQ-8426

JS-7552, HT-6281, MF-3335, GD-7712, GY-3812, HO-4016, 145-7698, HE-7320, 134-6941, MB-1663, HX-3315, 131-9616, 113-8633, 146-8547, ME-8072, 500-6384, JU-0122, HB-0891, HX-3337, HY-7729, MQ-6759, MT-8770, JQ-4751, HA-5936, ME-3264

ME-0112, MJ-8396, GL-9149, MG-9548, MA-5640, MC-6991, MS-5047, HG-2404, HX-4595, JN-5635, MG-8608, ML-4984, GZ-4807, 155-9111, UB-0485, JG-1744, GR-8956, HQ-2080, ML-9198, HY-7251, MC-0030, HW-8529, 139-3055, TS-7884, JZ-4576

ME-3357, 112-4025, HR-3132, 116-0737, JY-8745, 156-4256, JX-0022, JY-8701, JY-8075, JU-1761, JZ-4536, HK-4853, 500-4620, JU-4885, 131-3334; MG-4680, HA-6357, MQ-2817, 142-8408, JP-3981, HP-3606, 141-8488, MC-9417, MT-2366, HU-3084

MU-2118, GZ-8831, 137-3070, 500-4977, NPMG-5253, NPHE-3691, HV-0014, GC-7484, GN-1122; GQ-6823, GQ-5504, HT-0556, MJ-0354, 152-9935, UB-0434, 158-9031, GL-5668, GE-1784, GK-8407, 147-2056, 148-4699, GJ-4686, HA-6150, GS-9064, 103-8401

132-9636, 140-8796, GI-0665, 144-4327, GO-8475, JG-1153, 126-9421, 153-8364, 156-9838, HD-6885, HC-0954, 132-8541, JY-8730, 144-3815, 114-0082, GW-5591, 156-2360, 159-5715, MU-3483, GU-9973, 133-8071, 160-7753, 150-6642, 159-7928, 147-2066

152-0810, GP-4344, HG-0782, JP-8496, 500-0751, 156-4649, 158-6405, 144-4849, HC-3619, 144-3686, 142-2758, 142-3132, HL-1586, HS-8128, 502-0718, 158-8560, 143-1502, 126-4717, 500-9002, 113-3963, 132-6098, HK-1612, 140-7258, 155-4363, 92-6011

JU-9459, MQ-2719, JY-5704, HV-4676, JP-2914, HK-1350, 152-5727, 113-0162, 143-5861, 500-6491, WPGF-7841, JC-5267, NPNQ-7895, NPJL-6577, MK-4797, 142-6817, MG-9589, HK-3072, NPME-8207, WPGB-3027, 140-2122, 85-8429, 500-5180, JG-6983, NPHZ-3569

144-6990, HI-6552, MC-9707, GJ-7397,. 154-3705, JZ-8288, 159-7884, GO-6101, 500-5806, EPGC-1404, HX-0574, HD-3161, NPHE-2136, JC-7207, 128-1788, JJ-8918, 86-9278, MT-2188, MR-2982, WPJX-5048, NPGS-6487, NPJT-5441, NPHU-2187, 147-2187, EPJP-9139

HA-6086, NPMQ-6774, 500-4035, 155-9763, 139-3413, NPHW-2666, 157-8006, NPHC-7243, GZ-4269, MG-4930, NPJJ-8048, 153-4408, JU-4773, NPJN-4350, MP-9214; GI-1796, MW-1398, MN-7140, JB-5123, TH-0468, GQ-1115, NPMB-1656, EPGG-0446, UB-0179, HO-6833

142-1524, NPHM-9634, 147-8486, NPJY-9788, 500-6362, JL-0767, NPMG-8588, 125-3459, 501-0033, MX-3444, GY-4429, JW-1939, JB-7578, MD-7499, GB-6236, GF-6609, HE-6311, MG-7362, GO-3542, JL-2298, HH-2369, NPJF-0943, MD-9309, NPHH-4281, NPJN-7698

135-6195, EPGQ-9888, JJ-5505, 501-0010, HB-2090, MV-8813, NPJB-8890, NPJP-0218, NPHZ-4515, JS-7818, JO-3265, MA-3269, NPGP-0350, 147-7153, NPHS-2097, NPJB-6949, JR-6742, GV-0954, JA-2188, MP-8884, 147-5612, HY-5595, GW-5174, 148-2345, JD-6281

HR-9091, JH-0645, MX-3338, GA-5919, GZ-5648, MM-4000, HH-4263, JZ-8349, GF-3959, MM-3197, GF-9495, 128-3049, HY-7689, JM-2309, GO-7002, JG-1151, MG-8942, 124-6682, 500-7270, 134-7671, JZ-5354, HM-9008, MT-2758, 156-4452, 130-3345

HG-0736, GY-9954, GU-5747, TL-4762, HG-0769, 145-3799, 156-8448, JO-2449, 93-2015, HC-3531, HR-7431, HX-0127, 102-7526, 136-3051, GQ-9349, MA-9302, 140-7115, HI-9992, 104-8246, JR-9865, HR-7477, MM-3161, MT-9325, MQ-0038, HS-0235

93-0159, 139-8758, NPMP-3528, NPHU-4059, NPJN-7752, NPMP-6547, NWGA-6650, NPHH-6216, 125-6144, 143-6764, NPHX-4663, 500-9810, MF-8116, NPGM-0545, MD-5488, MK-9327, NPGQ-0941, NPMC-8679, GN-1107, 141-7451, 101-9405, 500-8408, NPMA-3252, NPHZ-2793, NPHD-6538

148-2042, JT-2616, 500-1798, GV-1270, JL-6633, MF-3673, 500-1975, 139-9618, JP-7850, MD-2094, MP-0707, MH-6525, ME-3356, NWGI-3941, JB-7291, JV-2706, TF-6500, 122-8141, GZ-7010, 151-7457, 500-5494, 156-0204, NPTL-4942, MB-9192, 110-1299

NPHC-3894, 150-0489, 131-3470, 137-4544, NPMC-6822, JM-0334, NPGS-4484, NPJV-9788, GO-8349, 152-3884, NPHA-5995, NPGP-5687, NPJO-0790, 152-7853, HJ-3193, MC-6937, 155-3602, HN-9782, JY-2847, MI-6182, JS-7886, MR-2764, MH-4041, JY-5573, 133-6780

MC-7563, HB-0910, JZ-6874, JU-9528, JO-3040, HR-3857, JU-9541, JS-2176, GN-1133, TL-5081, JG-9994, 96-8821, 154-8756, GU-5713, MB-1645, HH-4279, JU-4970, MA-7035, 121-3509, 131-1745, 150-7289, MI-0555, 138-1969, MK-8127, NPHI-6089

155-6077, HG-1247, HE-6164, 140-9256, HO-0497, 142-8692, 146-8833, JS-4851, 154-3813, HW-6276, 150-5291, MD-9479, NPMQ-7912, 502-0338, 105-6854, 144-9559, 500-9505, GC-6557, GR-5667, 113-7572, NPMR-7217, EPHT-9339, 134-3469, JD-4922, GR-8949

HN-9747, 154-3706, 104-3692, 144-1485, NPGU-0422, 500-8058, NPGI-7659, TS-8093, MH-7607, NPJZ-3337, NPMB-2751, NPHO-0499, NPMP-6545, MG-7760, MN-9361, 109-9781, 103-3118, 142-1491, 153-4125, JZ-9246, MW-9194, 97-2885, 502-1018, MC-7394, 122-9418

JB-2792, 152-8042, 155-1891, HI-5106, GP-6558, T12-5453, 141-3564, TS-8055, 152-6713, GO-5960, 142-3385, 127-9603, MH-2987, 146-5183, JK-9266, MT-2746, 117-8310, 500-0719, 121-9599, HK-4022, HC-8011, GN-6640, JB-7298, GO-8515, HC-5844

MR-4819, HV-1239, JG-5462, JY-8670, 135-3068, GR-5015, GG-4322, MQ-7939, GO-7400, 146-3192, MK-8325, 147-7066, 140-5432, 154-8774, MI-5778, 147-7270, HB-7384, JS-3263, MF-3489, HM-9576, GI-1770, NPTL-4996, 146-9991, NPJP-0195, HQ-2654

JX-7821, MX-3389, JJ-7390, 500-2119, NPJG-1739, JW-7486, NPGI-7869, NPJG-3919, 135-3789, NPJM-7467, NPGQ-9439, NPHA-1118, NPJN-8792, GN-9769, 145-1292, 117-1635, 148-2102, 102-1408, 500-3831, TV-6884, 140-2840, 502-0674, GR-8231, 159-6977, NPMA-6513

132-0128, 149-1089, 502-0897, NPGN-1180, 138-2607, EPHR-3128, NPGO-8423, 500-0422, JM-7102, HC-3546, JQ-9533, MD-4387, NPMI-6298, NPHD-3383,143-3789, MQ-2688, GM-0593, NPGY-2266 ,141-4881, NPMT-8150, NPMC-0205, NPML-5783, JQ-8515, HN-1731,MX-3037

MR-4633, NPJS-3203, NPHP-1133, JB-8878, WPGB-6562, HM-5910, NPHG-2435, JY-8712, NPGW-0451, GL-5461, 140-7566, NPMP-4892, NPMQ-3462, TE-6671, 141-4917, GO-6098, 139-3994, 500-4986, HD-6399, JD-1747, 151-4494, HT- 6389, MB-0073 , 143-8825, HD-5472

JF-5079, JL-2268,500-2121, MT-4487, NPMH-3936, HA-1102, 500-7416, 88-4707, 500-6518, ML-8561, JC-3547, GH-0992, 500-1578, HM-4915, GX-7121, 142-2161, 123-6915, 155-2398, JF-1870, JH-4082, HL-6928,MV-8202, MS-1838, TS-8269, ME-1013

MF-1837,138-7855, 147-6208,158-3717, MN-0519, HW-3962, JE-5133, JB-7457, ME-6087, 153-9024, 143-9322, GT-5261, 149-2576, HI-6622, 120-9957, WPGL-8394, JD-4523, MH-8392, NPGD-2988, JJ-8460, NPGO-8517, NPJK-0428, 156-0372, MK-8125, NPJI-9689

502-0502, NPGQ-9467, NPJG-7246, NPHI-8985, WPHE-1221, 156-8246, 500-2207, HR-9864, HQ -8413, 500-0066, GQ-2280, GU-5815, GY-9753, HJ-1991, HB-7438, WPML-5115, WPMJ-0601, 141-1770, NPGK-6526.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரவூர்தி தடம்புரண்டதால்
# ஏ-9 வீதியில் போக்குவரத்து தடை

(கிளிநொச்சி)

ஏ-9 வீதியின் கொக்காவிலுக்கும் மாங்குளத்துக்கும் இடையிலான பாதையில் பாரவூர்தியொன்று தடம் புரண்டுள்ளதால் போக்குவரத்து தடை ஏற்பட்டுள்ளது.

இதனால் கொட்டும் மழைக்கு மத்தியில் நான்கு கிலோமீற்றர் நீளத்துக்கு வாகனங்களின் வரிசை தொடர்ந்து கொண்டிருந்தது.

கொழும்பு மற்றும் தூர இடங்களுக்கான பேருந்துகள் உட்பட அனைத்து பயணங்களும் தடைப் பட்டிருந்தன.

பாரவூர்தியை மீட்டு பாதையைச் சீர்படுத்தும் பணியில் படையினரும் பொலிஸாரும் ஈடுபட்டனர்.

சுமார் மூன்று மணிநேரமாக இந்தப் போக்குவரத்து தடை ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

# தொடரும் கடும் மழையால் மீள்குடியேறியோர் பாதிப்பு

(கிளிநொச்சி)

இடைவிடாது பெய்துவரும் அடை மழை காரணமாக இறுதிக் கட்ட யுத்தத்தின்போது இடம் பெயர்ந்து மீள்குடியேற்றப்பட்ட மக்கள் பெரும் இடர்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்படுகின்றது.

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவில் மீள்குடியேற்றப்பட்டுள்ள மக்கள் சில தினங்களாக பெய்துவரும் மழை காரணமாக வீடுகளில் வெள்ள நீர் புகுந்த நிலையில் இருப்பதற்கு இடம் எதுவுமின்றி உண்பதற்கு உணவு அற்ற நிலையில் காணப் படுகின்றனர்.

மீண்டுமொரு கொடூரமான இயற்கை யுத்தத்திற்கு முகம் கொடுக்கும் வன்னி மக்கள் அரசாங்கத்தின் உலர் உணவுப் பொருட்களையும் தங்களுக்கான தங்குமிட மாற்று வசதிகளையுமே எதிர்பார்த்து நிற்கின்றனர்.

குளங்கள், கால்வாய்கள் என எங்கு பார்த்தாலும் நீர் நிலைகள் நிரம்பிவழிகின்றன.

கடந்த காலங்களிலும் பார்க்க பத்து வீதம் உயர்வடைந்து மழை வீழ்ச்சி பதிவு செய்யப்பட்டிருப்பதாக வானிலை அதிகாரிகள் கூறுகின்றனர்.

எனினும் காலநிலையின் சீர்கேடுகள் தொடர்ச்சியாக சில தினங்கள் நீடிக்கவுள்ளதால் வன்னிப் பிரதேசத்தில் மீள்குடியேற்றப்பட்ட மக்களின் நிலைமைகள் தொடர்பில் அரசாங்கமும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-7)

## இலங்கை விடயத்தில் பின்...

இது தொடர்பில் பின்னர் அறிவிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்திருந்தார். இந்தநிலையில் நேற்று முன்தினம் பிற்பகல் நடைபெறவிருந்த ஐக்கிய நாடுகள் சபையில் நாளாந்த செய்தியாளர் சந்திப்பு இரத்து செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இந்தசெய்தியாளர் சந்திப்பின்போது இலங்கை தொடர்பிலான ஐக்கிய நாடுகள் நிபுணர்கள் குழு மேற்கொள்ளவுள்ள விஜயம் தொடர்பில் இன்னர் சிற்றி பிரஸ் பல கேள்விகளை எழுப்புவதாக இருந்தது.

எனினும் இந்த சந்திப்பு இரத்து செய்யப்பட்டதன்பின்னர் அதற்கான விளக்கத்தைக் கூறி இன்னர் சிற்றி பிரஸ் செய்தியாளர்கள் ஐக்கிய நாடுகள் சபையின் பேச்சாளர் பர்ஹான் ஹக்கிற்கு கடிதம் அனுப்பியிருந்தனர்.

செய்தியாளர் சந்திப்பு இரத்து செய்யப்பட்டமைக்கான காரணம் மற்றும் நிபுணர்கள் குழுவின் இலங்கை விஜயம் தொடர்பிலான விளக்கம் என்பவை குறித்து அந்தக் கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

எனினும் அதற்கு இந்தக் கூட்டம் இரத்து செய்யப்பட்டதுடன் மீண்டும் இன்று தொடரும் என நான்கே வார்த்தைகளில் பர்ஹான் ஹக் பதில் வழங்கியிருந்ததாக இன்னர் சிற்றி பிரஸ் தெரிவித்துள்ளது. (ச)

## இலங்கைக்கு விஜ...

மூன்று நாட்களின்பின் பஞ்சாப் சட்டசபையில் இது குறித்து உறுப்பினர் ஒருவர் கேள்வி எழுப்பியிருந்தார்.

அதன்பின் கராச்சியிலுள்ள ஜின்னா சர்வதேச விமான நிலையத்தில் கொழும்பிலிருந்து சென்ற விமானம் ஒன்றிலிருந்து அவர் இறங்கியமை தெரியவந்துள்ளது.

இந்நிலையில் பாகிஸ்தானைவிட்டு வெளியேறியமைக்கான காரணம் எதனையும் தெரிவிக்க பஞ்சாப் மாநில ஆளுநர் சல்மான் தாஸீர் மறுத்துள்ளார்.

இவர் எதற்காக இலங்கைக்கு இரகசியமாக விஜயம் செய்தார் என்பது குறித்து இதுவரை தெரிவிக்கப் படவில்லை.

ஆயினும் இவர் கொழும்பு பங்கு சந்தை வியாபாரத்தில் முக்கிய புள்ளி எனவும் அதனால் இரகசியமாக அடிக்கடி கொழும்பு சென்று வருவதாகவும் தெரியவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## தொடர்ந்தும் மன நோயாளி...

பொதுமக்கள் கலந்து கொண்டு தமது இறுதி அஞ்சலிகளை செலுத்தினர்.

தொடர்ந்து நண்பகல் 12 மணி வரை பூதவுடல் அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது.

பின்னர் பிற்பகல் 1.45 மணியளவில் பூதவுடல் வலிகாமம் கல்வி வலயத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. இங்கு வலயக்கல்வி அலுவலக அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டு தமது அஞ்சலிகளை செலுத்தினர்.

இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டு நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் உரையாற்றினார். அவர் தனது உரையில் மேலும் கூறியதாவது,

1985 காலப்பகுதியில் கிளிநொச்சி ரயில் நிலையத்தில் 16 தமிழர்கள் சுட்டுக்கொல்லப்பட்டபோது அந்த சிப்பாய் மனநோயாளி என்று மூடிமறைத்தார்கள்.

இன்றைக்கு சங்கானையில் இந்து மதகுரு கொல்லப்பட்டபோது கஞ்சாவிற்காக இராணுவச் சிப்பாய்கள் துப்பாக்கி கொடுத்ததாக கூறுகின்றார்கள்.

தமிழர்கள் தொடர்ந்தும் கொல்லப்பட்டுக்கொண்டிருப்பார்கள். இவர்களும் இப்படி ஏதாவது காரணம் கூறிக் கொண்டே இருப்பார்கள்.

நேற்றுமுன்தினம் கல்வியியலாளர் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கின்றார். இதற்கும் ஏதாவது காரணம் கூறத்தான் போகிறார்கள். அதில் ஆச்சரியப்பட வேண்டிய அவசியம் கிடையாது.

குடாநாட்டில் நடந்த சாவுகளுக்கும் கொள்ளைகளுக்கும் அரசாங்கமே முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டாக வேண்டும். குடாநாட்டில் கடந்த 15 வருடங்களுக்கும் மேலாக இராணுவம் நிலைகொண்டிருக்கிறது.

இராணுவமும் இராணுவ புலனாய்வுத் துறையினரும் கண்ணில் எண்ணெய் விட்டு பார்த்துக் கொண்டிருக்கும் சூழலில் இப்படியான சம்பவங்கள் எப்படி நடக்கின்றன.

குடாநாட்டின் முதுகெலும்பாக இருக்கின்ற சகல துறைகளையும் அடக்கி ஒடுக்குவதன் மூலம் மக்களை மந்தைச் சமூகமாக மாற்றும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

இன்று இந்த நிகழ்வை சாதாரண சம்பவமாக பார்க்க முடியாது. இந்த விடயத்தில் அனைவரும் அக்கறையுடன் நடந்து கொண்டாக வேண்டும். இந்த மூத்த கல்வியலாளருக்கு நடந்திருப்பது நாளைக்கு யாருக்கும் நடக்கலாம். துப்பாக்கி முனையில் மூன்று கொள்ளைச் சம்பவங்கள் நடந்திருக்கின்றன.

அவற்றில் இரண்டு பேர் கொல்லப்பட்டிருக்கின்றார்கள். இவ்வாறான சம்பவங்களை மிகவும் வன்மையாக கண்டிக்கின்றோம். மேலும் கல்விப் பணிப்பாளரின் குடும்பத்துக்காகவும் அன்னாரின் ஆத்மசாந்திக்காகவும் இறைவனை பிரார்த்திக்கின்றோம் எனக் கூறினார். (எ)

## பருவக்காற்று காண...

முகாமைத்துவ மத்திய நிலையம் குறிப்பிட்டுள்ளது.

102 வீடுகள் முழுமையாகவும் 423 வீடுகள் பகுதியளவிலும் வெள்ளத்தின் காரணமாக சேதத்துக்குள்ளாகியிருப்பதுடன் இருவர் காயத்துக்குள்ளாகியுள்ளனர்.

இதேவேளை வெள்ளத்தின் காரணமாக கிழக்கு பல்கலைக்கழகத்தின் திருகோணமலையில் அமைந்துள்ள தொலைத்தொடர்பு மற்றும் வியாபார முகாமைத்துவ பீடமும் நீரில் மூழ்கியுள்ளது. (ச)

## இலங்கை-இந்தியாவுக்கு...

பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவின் அழைப்பின் பேரில் இலங்கைக்கு மூன்றுநாள் விஜயமாக இந்தியப் பாதுகாப்புச் செயலர் பிரதீப் குமார் இலங்கை வந்தார்.

இவர் இலங்கை பாதுகாப்புச் செயலரை சந்தித்தபோது இருநாட்டு பாதுகாப்பு உறவுகளில் குறிப்பாக பயிற்சி மற்றும் இரு தரப்பு சேவைகளில் பரிமாற்றங்களைமேற்கொண்டு தொடர்புகளை மேலும் வலுப்படுத்துவதற்கு இணங்கியுள்ளதாக இந்தியா அறிவித்துள்ளது.

இந்தியப் பாதுகாப்பு மற்றும் வெளியுறவுத்துறை அமைச்சுகளின் மூத்த அதிகாரிகள் இந்திய இராணுவம், கடற்படை, வான்படை மற்றும் கடலோரக் காவற்படைகளைச் சேர்ந்த அதிகாரிகள் அடங்கிய தூதுக் குழுவொன்றுடனேயே பிரதீப் குமார் இலங்கை வந்தார்.

இந்தவிஜயத்தின்போது இலங்கை வெளியுறவுத்துறை அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் மற்றும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உட்பட உயர்மட்ட அதிகாரிகள் பலரையும் சந்தித்துள்ள இந்தியப் பாதுகாப்பு செயலர் இருதரப்பு பாதுகாப்பு உறவுகள் குறித்து பல விடயங்கள் பற்றி கலந்துரையாடியுள்ளார்.

இரு நாட்டு பாதுகாப்புச் செயலர் தலைமையிலான குழுவினரும் நேற்றுச் சந்தித்தபோது அடுத்த வருடத்திலிருந்து இருநாட்டு கடற்படை மற்றும் இராணுவ மட்டங்களில் தொடர் சந்திப்புக்களை நடத்துவதென்றும் கூட்டு கடற்பயிற்சி நடவடிக்கைகளில் ஈடுபடுவது என்றும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இதன் ஒரு கட்டமாக இந்திய வான் படை தளபதி எயார் சீப்மார்சல் பிரதீப்நாயக் அடுத்த மாதம் இலங்கை வரவுள்ளார்.

இவை தவிர உள்நாட்டு சிவில் விமான போக்குவரத்தினையும் உள்நாட்டு வர்த்தகத்தையும் ஊக்குவிப்பதற்காக தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் பலாலி விமான நிலையம் மற்றும் காங்கேசன்துறை துறைமுகத்தை மீளத்திறக்கும் செயல் திட்டங்கள் பற்றியும் இந்த சந்திப்புக்களின் போது விரிவாக ஆராயப் பட்டுள்ளது.

இலங்கையில் உயிரிழந்த இந்திய இராணு வீரர்களுக்கு ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபிக்குச் சென்று அஞ்சலி செலுத்திய பாதுகாப்புச் செயலர் பிரதீப் குமார் நாடு திரும்ப முன்னதாக கட்டுநாயக்க விமான படைத்தளத்திற்கும் செல்லவுள்ளதாக இந்திய உயர்ஸ்தானிகராலயம் குறிப்பிட்டுள்ளது.

(மற்றொரு செய்தி உள்ளே) (ச-7)

A/L 2013
கலை, வர்த்தக
கணித, உயிரியல்
பிரிவுகள்
ஆரம்பம் :08.01.2011 சனி 8.00 மணி
புதிய அனுமதிகளை அலுவலகத்தில் பெறவும்
NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

MyWay English ஆங்கில பயிற்சி
01.01.2010 சனி புதுவருட விடுமுறை
சனி, ஞாயிறு 3 மாத புதிய பிரிவு
ஆரம்பம் : 02.01.2011 முடிவு : 31.03.2011
இலக்கண கற்றல், எழுத்துப்பயிற்சி இன்றி ஒரு ஆங்கில சொல்கூட தெரியாதவர்களும் 3 மாதத்தில் ஆங்கிலத்தில் பேச முடியும்
பயிற்சியில் சேர கடைசி சந்தர்ப்பம்
MyWay 077 33 63 456
182, Stanley Rd, Jaffna

பொருளியற் கல்லூரி
நாவலர் றோட், யாழ்ப்பாணம். K.K.S.றோட், இணுவில்.
(இரு இடத்திலும்)
A/L 2013 கலை வர்த்தகப் பிரிவு
ஜனவரி 2 இல் காலை 8.00 மணி
உங்கள் அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளவும்
(சி-1989)

புதிய பிரிவுகள் ஆரம்பம்
Advanced Dip. in Video mixing
Auto CAD
ICT(O/L) (தரம் 10 & 11)
ICT(A/L) (தரம் 12 & 13)
GIT(A/L) (தரம் 12 & 13)
Ms Office2007 & DTP
Internet & Email
BIT, AAT, ACBF
Accounting Package
Computer Hardware
Programming Languages
Kids Programme (தரம் 01→09வரை)
Group Classes
O/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கு 50% கட்டணச் சலுகை
கே.கே.எஸ் வீதி உப்புமடம் சந்தி அருகாமையில்
CB Computer Academy Station Road Kondavil. T.P: 021-3217903

மலிலி சுப்பர்
கேக் தயாரிப்பதற்கான பொருட்கள் மற்றும் பிஸ்கட், பால்மா, சொக்லேட், சிற்றுண்டி வகைகள், ஐஸ்கிறீம் வகைகள், பழவகை என்பவற்றைப் பெற்றுக் கொள்ளலாம்.
சந்தைக்கு அருகாமை, மானிப்பாய்.
புதுவருடத்தை முன்னிட்டு விசேட விலைக் கழிவு விற்பனை
(சி-1956)

## கண்ணீர் அஞ்சலி



கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் விரிவுரையாளராகவும், வலிகாமம் கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளரும், இலங்கை கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தருமான

திரு. மார்க்கண்டு சிவலிங்கம்

அவர்கள் அகால மரணமடைந்ததையிட்டு ஆழ்ந்த கவலையையும் அவரது குடும்பத்தாருக்கு எமது அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

வட மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர், உத்தியோகத்தர்கள்

(சி-1987)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, [illegible] யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.12.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org